[illegible]

வேலுமயிலுந்துணை

# சிறுநூற்றொகை.

இது

சென்னைமாநகரம்

வா. மகாதேவமுதலியாரவர்களால்

இயற்றப்பெற்று,

ஸ்ரீமான். பிச. அரு. அரு.

அருணாசலஞ்செட்டியாரவர்கள்

பொருளுதவியால்,

மீனலோசனி முத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Copyright Registered.

1912.

சிவமயம்.

காரைக்குடி-ஸ்ரீமான்.

## ராமசொ. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

சிவகங்கை ஜமீன்

### திருப்புத்தூரைச்சேர்ந்த தம்பிபட்டி-

### சொ. வேலுச்சாமிக்கவிராயரவர்களியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகமொரு குடைநிழலிற் காத்தளிக்குந் *
திகிரியோற் குரிய வாகத்
தலைமையுறு மரசிருக்கை தமிழென்றுஞ்
சென்னையப்பா சாமி வள்ள
லலகிலதா வியற்றுதவப் பயனானோன்
மெய்யுணர்ந்து மடைவிற் போதித்
திலகியசொக் கலிங்ககுரு திருவருள்பெற்
றவனடிக ளிறைஞ்சி வாழ்வோன். (க)

செந்தமிழி னிலக்கியமு மிலக்கணமுஞ்
சித்தாந்தத் தெய்வ நூலுஞ்
சந்தமுறு தருக்கமுதற் பலநூலொ
டாங்கிலமுந் தகக்கற் றுய்ந்தோன்
வந்தடையு மாணவகர்க் கன்பினொடு
நூல்கள்பல வழங்குங் காலைச்
சிந்தைகொள நுண்பொருளு மெய்ம்மைபெற
வவர்க்குணர்த்துஞ் சிறப்பின் மிக்கோன். (உ)

மன்னுபுகழ் மகாதேவ பண்டிதன்றா
னடக்கமமை மாண்பு தோன்ற
வுன்னுசிறு நூற்றொகையாம் பெயர்தந்து
பெரும்பொருணூ லுரைத்தா னம்மா
வன்னதனை யறிஞர்மகிழ் பூப்பவச்சிட்
டுதவினனு லவன்யா ரென்னிற்
கன்னல்கமு கெனுங்கழனி சூழ்தேவி
கோட்டைநகர்க் கவிஞர் செம்மல். (௩)

துறைவிரவு பெருஞ்செல்வ வைசியர்தங்
குலத்துதித்தோன் றூய ஞானப்
பிறைவிரவு முடிப்பரன்வா ழிலுப்பைநகர்க்
கோயிலினன் பேற்றால் யார்க்கு
நிறைவிரவு தன்மையொன்றே பெறுகுபே
ரனின்மேலா நிகழ்த்துஞ் செல்வ
னறைவிரவு சோலைமலி செந்தூரிற்
கந்தனடி நயக்கு மன்பன். (௪)

சேவிலூர் கொற்றவா ளீசர்திரு
நெல்லையம்மை திகழு மேன்மைக்
கோவிலூ ருறையருணா சலத்துறவு
சாமிகளின் குமரன் சேயாம்
பாவிலூர் புகழருணா சலயகிபன்
றருமைந்தன் பண்பு மேய
நாவிலூர் பலகலைதே ரருணாச
லப்பெயர்கோ ணரேந்த்ரன் மாதோ. (௫)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருவணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈதனையீ னொன்பணித்தல் இதுகுருக்
குயரோ மியம்பி டாமற்
சாதனையீ ரெட்டியுடைச் சாத்தருளா
சீவருக்கே சாற்று பேற்றுக்
கேதனையீ யுயர்த்தபாதங் கடவினைய
சொக்கலிங்கன் சேது றில்லா
போதனைசிய இனநெறிய வெம்பாகு
மெய்த்தட்டீற்றிப் போற்றி வாழ்வாம்.

1052

உ

வேலாயுதமுந் துணை.

# திருச்செந்தூர்முருகர் பதிகம்.

## காப்பு.

### வெண்பா.

பண்ணேறு செந்தமிழிற் பாடத் திருச்செந்தூர்க்
கண்ணேறு சோலையிற் காவலனே—பொன்னேறு
சிந்தந்து யங்கிலன் சேவித்து நிற்கின்றேன்
மைந்தந்தி * யங்கிரிதம் மை.

## நூல்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாமாதி யாறுறுங் கடந்து நின்ற
பரனீயாண் டானப்ப னன்பன் § குருவென்
றோராத நாளெல்லா நன்று ளாமோ
வுதித்திடா நாளன்றே வோது கண்டாய்
நேராக நின்றுபோ ரேற்ற சூர
னீர்க்குமிழி போன்றொழிய வேலை விடுத்துத்
தீராத விடர்தீர்த்த தீர வீர
சிற்பதமே செந்தூர்வாழ் செல்வத் தேவே. (௧)

---

* அங்கிரி—திருவடி.

§ நான் என்று—குஹோஹம் என்று.

சிற்பணியாக் காயமிருந் தென்ன காய
மிறைஞ்சாக் கைகளையென்கை சகைக தானே
வெற்பணியாப் பாடலாய் பிலவா யன்றோ
வணங்காத சிலதலைகள் சிரமே யாமே
பெற்பணியாப் பூண்டாமு மீதி லேய
னெழிற்புயத்து மகிழ்க்கணைக்கு மிவைய வைக்கா
சொற்பணியாக் கடாப்பாற் றேன்றூச் சோதி
தூயதிருச் செந்தூர்வாழ் தொன்மைத் தேவே. (உ)

† அளவைநூ லுணர்த்துக்கா லவித்தைக போமோ
வரிய ‡ லியல் தெரியிலிரு வினையும் போமோ
யளவையா ரென்பதற்கே தன்ன டக்கி
முறையன்பா லத்திப்பே தெளிதி ருமோ
தளவைசேர் திருவுருத் தெய்வ மாவே
தணைவாம லருகிருப்பத் துணைக்கே யேயிது
களவைசேர் தாமகுறவா கன்னி மைக்கா ண்
கந்தனே செந்தூர்வாழ் கருணைத் தேவே. (௩)

§ இல்லென்று ¶ முண்டில்லை யென்றும் பேசி
யேதமுறு பலசமயக் கணக்க ரென்று
மல்லென்று மகலாத வகத்தி னார்த
மவைபுகா வரமொன்றெற கருளல் வேண்டுங்
கல்லென்று கறங்கருவி யிழியுஞ் சாரற்
மலைமலைக் கண்ணுதலா ளிடத்தின் மேவும்

---

† அளவைநூல்—தருக்கம். ‡ இயல்—இலக்கணம்.
§ இல்—நாஸ்தி. ¶ உண்டில்லை—அஸ்திநாஸ்தி.

வில்லொன்று நுதல்வல்லி பெற்ற செல்வா
வேதியனே செந்தூர்வாழ் விமலத் தேவே. (௪)

* உடம்பானு மற்றதுகொ ளுயிர்தன் னானு
முறுவனவைந் தெய்வத்தா னுறுவ யாவுங்
கடம்பாகின் கழல்பாவு காத லோர்தங்
காற்றுகளே கருஇறோர்க் கதுவா வென்ப
நடம்பானல் விழிகளிக்க நவினு நாத
னல்லுபதே சங்கேட்க நவின்ற சாமி
யுடம்பாடி லவுணர்தமை யொழித்த வேலா
வுத்தமனே செந்தூர்வா ழுண்மைத் தேவே. (௫)

போதகமே பொய்புயர்வில் சடக்க ரத்தை
யுவவாத வின்பங்கை செல்லி யாமே
தோதகமே யிருந்தவிடந் தோன்று மற்போர்
தொல்லைவினைத் தொடக்கறுக்குஞ் சூழ்ச்சி யீதே
பாதகமே படாவுணப் பருமரத்தைப்
பகுந்திருகூ றாக்குபராற் பரனே மன்னிப்
போதகமே பொலிநாணற் பொய்கை பூத்த
புண்ணியனே செந்தூர்வாழ் புனிதத் தேவே. (௬)

புத்தியெனும் பாகுய்ப்பப் பொள்ளல் யாக்கைப்
போகுயரு மிரதத்தைப் பொறிக ளாகு

* ஈண்டுக் குறிக்கப்பட்டன:- ஆதிபௌதிகம், ஆத்தியாத்மிகம், ஆதிதெய்விகமென்னும் தாபத்திரயங்கள்.

மத்திகையிற் கலினப்பாய் மாவி ழுத்து
மலிவிடய வனம்புகுதும் வயப்ப டாதே
சத்திவடி வேலேந்திச் சங்கி ராமந்
தருசிகா ளத்துவரு சாமி நாதர்
முத்திவடி வேதந்தா ளத்தின் றம்பீ
முருகனே செந்தூர்வாழ் முதன்மைத் தேவே. (௭)

பாரகத்தும் விசும்பகத்தும் பரவ லான
பரங்குன்றஞ் சோலைமலை பழநிக் கண்ணு
மேரகத்துங் குன்றுதொறும் வீற்றி ருப்பா
யெங்கைநீ யன்றோவெற் கிசைத்தி கண்டாய்
வேரகத்து ஞானியகத்துஞ் சுவைவெவ் வேறு
விளைகரும்பைக் கவற்றுமொழி வள்ளி மாது
வாரகத்து வைத்தகடைக் கண்ணா விண்ணோர்
வந்துபணி செந்தூர்வாழ் வாய்மைத் தேவே. (௮)

வள்ளானிற் * றேணிப்பார் மருவல் வேண்டு
மதிவேண்டு நின்கருணை நிதியும் வேண்டு
மெள்ளாமை துள்ளாமை யிகழ்பெ ருமை
யேதநோய் மேவாமை யென்றும் வேண்டும்
பொள்ளாத முழுமணியே பொன்னே முத்தே
புரையில்லா வயிரமே பூவே பூவின்
விள்ளாத நன்மணமே வேதாந் தத்து
வியன்பொருளே செந்தூர்வாழ் விமலத் தேவே. (௯)

---

*தேணிப்பார்—தியாணிப்பார். 'சிரிப்பார் களிப்பார் தேணிப்பார்' எனப் பெரியாரும் பணித்தார்.

மணியாழிப் பெரும்புவியின் மன்னாய் வாழ்வார்
மகப்பெறுவார் வாழ்நாளு மிகுவார் சிந்தா
மணியானைக் கற்பகத்தை வளைபத் மத்தை
வைத்தேவல் கொள்வார்நின் னாமங் கற்பார்
குணியாகிக் குணமாகிக் குறிய தாகிக்
குறிகண்டு துணிபொருளாய்க் குலவு மொன்றே
கணியாகிப் புனத்தருகே காண நின்ற
கருத்தனே செந்தூர்வாழ் கருணைத் தேவே. (௰)

முற்றிற்று.

உ

வேலுமயிலுந் துணை.

# பழநியாண்டவர் பதிகம்.

## காப்பு.

### வெண்பா.

பார்பூத்த தென்பழநிப் பாற்பொலியு மாண்டவனற்
சீர்பூத்த மால்புகழைச் செப்புதற்கு—* கார்பூத்த
தாமத்தன் றந்தவொரு தந்தியிரு தாளுளமாஞ்
சேமத்தின் வைத்தேன் றெரிந்து.

## நூல்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகெலாம் † பலத்தகநேர் வித்தொத் தேவன்
புருமாயைக் குள்ளாகி யுறுதி காணு
தலையிலாக் கவலையுந் தினைநா ளுற்று
வான்றோர்கண் முந்திரிகை வித்தி னீங்கே
யிலகியே மாயைதனக் கப்பா லாகி
யிணைதமக்குத் தாமேயா யிசைந்தா ரன்றோ
ரிலகுருப் பெருமையென்றே விழியுற் றுய்வேன்
வித்தகனே பழநிமலை மேவெம் மானே. (க)

---

ஆர்—ஆத்தி. † பலம்—பழம்.

தம்மையறிந் துலகறிவினைத் தழுவிப் பற்றத்
தக்கநெறி யறையுமான் மறைக ணிற்கச்
செம்மையறிந் துய்கலாச் சிறியர் சில்லோர்
சிற்றறிவிற் றேன்றியவா சிலபி தற்றி
வெம்மையுறப் பசுநூலென் றதனை யெள்ளி
மேதக்கோர் நகைபுரிய வினைவி னைத்தா
ரம்மையப்ப வவருயுமா றுள்ள தேகொல்
லாரமுதே பழநிமலை யமரெம் மானே. (உ)

ஆம்பரிசி னின்றால வடிவ நெஞ்சி
னழுத்திநித்ய கருமமுமற் றதனி னேருந்
தோர்பலவு மகலவிதி தோன்று மாற்றாற்
றாயநைமித் தியகரும மதுவுஞ் செய்யிற்
றும்பிலர வெனக்காணு முலக மெய்யாத்
தயங்கவரு † மலந்தொலைத்தாள் பவனீ யன்றோ
காம்பிணங்குந் தோளுமையாள் களிக்குஞ் செல்வா
கண்ணியனே பழநிமலைக் கண்ணெம் மானே. (௩)

அருத்தியொடுன் பதமலரை யணுகி நாளு
மகங்குழைந்து பணிந்தெழுந்தீ ரத்தஞ் சென்னி
பொருத்தியுன தேதமிலாப் புகழைப் பாடிப்
புண்ணியா புனிதாநின் னாறெ ழுத்தைக்
கருத்தினமைத் தொருகணமு மகலா வண்ணங்
கண்ணுமவர் ‡ விட்சேபங் கழற்று வாய்நற்
கிருத்தியமொ ரைந்துடைய கிருபா மூர்த்தி
கேகயமால் பழநிமலைக் கிளரெம் மானே. (௪)

† மலம்—பாவம். ‡ விட்சேபம்—மனக்கலக்கம்.

மண் §ணாசை பெண்மூன்றின் மன்னு வாஞ்சை
மாற்றியுயர் ஞானகுரு மலர்மு கம்பார்த்
தண்ணாவோ நாணுரென் றறைதி யென்று
வடிவணங்கி $ யெண்குணமு மமைந்து நிற்கப்
பண்ணேறு தத்தொமசி பகரக் கேட்டப்
பரநிலைநின் றவர்தமதஞ் ஞானம் பாற்றுங
கண்ணாவாய் நீயலையோ கற்றோ ரேத்துங்
கத்தனே பழநிமலைக் கண்ணெம் மானே. (௫)

மனமுளதே லுலகுளதஃ திலதே யில்லை
மற்றதியாங் ஙனமென்னின் மருவு மூன்றாய்த்
தினமுளதா மவத்தைதமிற் றிகழ்சு ழுத்தி
சேரினுல கில்லைமன மின்மை யாலே
யினமுலகே யஃதொழிந்த விரண்டி னுண்டா
மியங்குமன முண்மையா லென்றே னக்கே
கனமுளநீ யுணர்த்தினை யென்கைம் மாறே
கலைமுடிவே பழநிமலைக் கண்ணெம் மானே. (௬)

---

§ ஆசை—பொன்.

$ எண்குணங்களாவன:—வேர்த்தல், கண்ணீர் ததும்பல், கம்பித்தல், மெய்நடுங்கல், வார்த்தைதழுவல், மனம்பதறல், மேகம்போலுள்ளே குமுறி யுளமெலாம் வெதும்பல், மயிர்க்குச்செறிதல்.

ஒருமாயா ¶ விசிட்டபரப் பிரம மூலத்
தோரைந்துசமு சாரமரக் கிளைசத் தாதி
மருவாறு மலரறமு மறமுஞ் சார
மாறிலற முதஞன்கு மிலைகள் வேதம்
வருமோயாப் பலன்சன்ம மரணு திக்கண்
வாதையே யெனுமிவற்றை வகுத்துக் காட்டித
திருமாறு வென்னிலையைத் தெளியச செய்தாய்
தெய்வதமே பழநிமலைத் திகழெம் மானே. (எ)

ஆயுதரத துற்றிடுபோ ♆ தரந்தை யோரைந்
தணவுமிடை யுளதிதியி னத்த மீட்டல்
காயுமழி பசிபிணிவெவ காம மூப்பாற்
கரையிறுன்பம் வருமரண காலந் தன்னி
லேயுமஞர் நீயறிவா யென்றே நல்லோ
ரியம்பினரித் துன்பமெலா மொழிவ தென்றே
வாயுமறை யினஙகாணு தயர்ந்து தேடு
மய்பனே பழநிமலை யமரெம் மானே. (அ)

---

¶ விசிட்டம்—உடைமை.

♆ ஐந்தரந்தை [அவஸ்தை] யாவன:—கருப்பாசயப்பையுறுத்தல், அதிற்சலம்பூரித்தல், உதிராக்கினிசுடுதல், பிரசூதவாயுமுறித்துத்தள்ளுதல், யோனித்துவாரநெருக்குண்டல்.

* இலயமே விட்சேப மேக டாய
|| மிரசாசு வாதமென விசைக்க லுற்ற
நலமதே யில்லதொரு நான்கா 0 மூற்றை
நணுகாமற் காத்துயரு நிருவி கற்ப
நிலயமார் சமாதியினை மேவி நிற்ற
னின்மலவெந் நாளதனை நிகழ்த்து கண்டாய
மலயமா முனிக்கருளு மனவாக் கெட்டா
வான்பொருளே பழநிமலை வளரெம் மானே. (௩)

---

* இலயம்-ஆலஸ்யத்தினுலாவது நித்திரையினுலாவது விருத்தி யில்லாமலிருப்பது. விட்சேபம்-அநாத்மபதார்த்தங்களைத் துக்கவேதுக்களாக அறிந்து அத்துவிதானந்தத்தை விஷயமாக்குவதற்காக விருத்தி அந்தர்முக மாகிறது. அப்போது விருத்திக்கு விஷயமான சேதனம் அதிசூக்குமமா யிருக்கிறது. ஆகையால் கொஞ்சகாலமாவது விருத்தி அந்தர் முகமாயில்லாவிடில் சேதனஸ்வருபானந்தத்தை யடையாமல் விருத்தி அக்கணமே பகிர்முக மாய்விடுகிறது. இந்தப் பகிர்முக விருத்தி விட்சேபம். கடாயம்-இராகாதி தோஷங்கள்.

|| இரசாசுவாதம்-யோகிக்குச் சமாதியில் விட்சேபத்தாலான துக்கநிவிர்த்தியினின்று முண்டாகு மானந்தானுபவம்.

0 ஊற்றை—இடையூற்றை.

'சோகமா மோகமிவை துனுமெ ணாது
துயருழக்கு மனமாய்க்கச் சூழ்ச்சி சொல்லாய்
மாகமா நாட்டவரைப் புரக்க வந்த
மல்லாருந் திணிதோளா மாசற் றோனே
ஏகநா மென்றுனுவா ரிதயத் துள்ள
வீசனே * யெண்குணனே யீறி லானே
யோகமா யின்மையா யுண்மை யாகி
யோங்கறிவே பழநிமலை யுறையெம் மானே. (௰)

முற்றிற்று.

எண்குணங்களாவன:—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை.

வேலுமயிலுந் துணை.

# பழநி நான்மணிமாலை.

## காப்பு.

### வெண்பா.

எழநிமலை யுள்ளத் திருக்கு மகிழ்ச்சி
பழநிமலை சேர்குகனார் பற்ற—மழவிடையா
ரீன்றதும்பி யான்றொடுக்கு மிந்நான் மணிமாலை
தேன்றதும்பி வாசமுறச சேர்.

## நூல்.

### வெண்பா.

பாரேந்து கொள்கைப் பழவடியா ரேத்தெடுக்குஞ்
சீரேந்து நின்றதனித் தென்பழநி—சேரேம்
பிறவிக் கடல்கடக்கும் பெற்றியெமக் குண்டோ
* குறவிக் குகந்த குரு. (க)

### கலித்துறை.

உகம்பற் பலமா நிரயத் தழுந்திலு முன்னையன்றிப்
புகம்பற் படாநா வணக்கம் புகன்று புகவிடமொன்

* குறவி-குறத்தி. "குறவிதோண் மணந்த செல்வக்குமரவே டாதை" என்றார் ஆளுடையவரசும்.

றகம்பற் பமதாம் படியருள் வாயெங்க ளன்னையத்த
விகம்பற் றுருச்சீர்ப் பழநி மலைப்பன் னிருகண்ணனே. (௨)

## விருத்தம்.

கண்டங் கறுத்த காபாலி
    கடுகிப் பாதஞ் சிவந்துவந்து
கண்டங் குன்னை யோமொழிக்குக்
    கண்ட பொருளைக் கேட்கநீர்க்
கண்டங் கன்ன லெனவினிக்கக்
    கழன்ற பழநி வாழ்வேபுன்
கண்டங் கிருளை யருளாலே
    கழிக்க வல்லோ னீதானே. (௩)

## நேரிசையாசிரியப்பா.

நீதா தாதா நீதா வருளென்
றோதா நின்றே யுறுதி நாடி
முற்பல பிறப்பின் முதிர்தவம் புரிந்து
சிற்பர வியோமஞ் சேர விருந்தோ
ரிருண்முழை யுள்ளரி யேறு தாழ்வோ
ரருண்முறை யறிந்தைந் தலம்புரி பொறிப்பெயர்ச்
சிரமுடை மனமெனுந் தெய்யவா டரவ
மரமுடை யாக்கை வன்மீ கத்திடைச்
செயலற் றிருப்பச் செப்புபு மந்திர
மயலுற் றகழூஉ வலியா வேட்கையா
னச்சா ரெயிற்றை நற்கெடுத் தெறிந்தோர்
மெய்ச்சார் புடையோர் மேவுதென் பழநி

மாமலை மருந்தே திருமான் மருமான்
பூமலை யாது புரக்குமா மலயம்
புக்க முனிவரன் புளகரும் பாவின்
றுக்ககண் ணீரு முருகுமுள் ளமுமா
நிற்க வப்பொரு ணிகழ்த்திய பெருமா
னற்கலை பலவு நாடும் பெம்மான்
மிகையுடை யாடவர் மிளிரு நாளிது
தகையழி மகளிர் தழைக்கு நாளிது
வல்வழக் கொன்றே வளரு நாளிது
நல்வழிக் கேகார் நலமுறு நாளிது
செற்ற மிகுந்தோர் செழிக்கு நாளிது
கற்ற வலத்தோர் கடைபடு நாளிது
பொய்மெய் யாகிப் பொற்புறு நாளிது
மெய்பொய் யாகி மேவு நாளிது
வேலியும் பயிரை மேயு நாளிது
தோலிருந் தின்சுளை தொலையு நாளிது

அதனால்,

மழைதரு வளனு மடங்கிய தெருவொடு
தழைதரு நிலனுந் தருவளங் கரந்தது
வறுமை மிக்கது வயக்க மற்றது
வெறுமை மேயது வெவ்வேறு கற்றே
யுடலார் வலியு முயிரார் குணனு
முடனார் வின்றி யோகைபொன் றியதால்
வயிறோம் புதற்கே வயின்வயி னோடினேஞ்
செயிரே நீங்கச் சேர்ந்தொரு கணமு
நின்னை நினைந்து நேர்ந்திலேம் வணக்கு

முன்னைநல் வினையிலே முனைவலாட் கொள்வது
நின்பெருங் கடனோ நிகழ்த்திநே மையா
பொன்பெறும் வறியர்ப் போன்றுற நின்னடிக்
கன்பெனு மொன்றே யருளுதி
துன்பெனு மொன்று துவாக் கழிமே. (௪)

## வெண்பா.

கழித்தேன் பலவைகல் கைதவமே செய்து
விழித்தேன் கவல்கின்றேன் வேலா — செழித்தே
யகங்ளெதன் பழநி யடையகா டாதே
யிகங்ளெதன் பழவினையை யென். (௫)

## கலித்துறை.

என்பங் குருகநின் றேத்து மடியார்க் கிருமைமுத்தி
யின்பங் குலவ வளிக்கும் பழநி யிருக்குமெந்தா
யென்பங் கிருத்தி மனமாம் புலத்தை யியறிருத்தி
யன்பங் குரித்திட வாசார வித்திட் டமைவுறவே. (௬)

## விருத்தம்.

அமையாது வானுயரு மன்பே யென்கோ
வடங்காது கரைபுரளு மின்பே யென்கோ
விமையாது வாழ்கின்ற ரிடுக்க ணென்னை
யிரவிமுன்பு பனியாக்கு மருந்தே யென்கோ
வெமையாதுஞ் செய்யும்வினைக் கீர்வா ளென்கோ
வேதென்கோ வேதென்கோ வினையி லெந்தா
யமையாரும் பழநிமலை யமர்ந்தா யின்றே
யருள்புரிவா யேத்தடியே னறியு மாறே. (௭)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

அறிவே நெறியே யத்து விதமே
குறியே குணமே குலமே யின்றி
வயங்குவான் பொருளே மண்விண் ணிருந்து
மயங்குவார் காணு மணியே யொளியே
துனிதரு வாழ்க்கைத் துயர நீக்கெனக்
கனிதரு கிற்பார் கலைக ணாகி
யொருவே லெடுத்த வுருவே யுலவாத்
திருவே பழநித் தேவே நீயுனை
பகுதி நின்னுழைப் பருந்தடர் சுரத் திடைப்
புகுதிகண் டோர்காண் புனலென வுளதா
லென்றறிந் தோரே யிகபரத் தாசை
யொன்ற விடுத்துப் போக்கொடு வரவு
மின்றி யலைவுறா உ மிகலார் மனத்தினை
வென்றி கொண்டு மேதகு வீடு
பெட்டமெற் றங்குறும் பெற்றி மேவித்
தட்டுமுட் டிலாது தலைப்பட் டோரே. (௮)

## வெண்பா.

தலைப்பட்டா னின்றனே தன்னை மறந்தாள்
வலைப்பட்டா னின்றுமம் வாயி னிலைப்பட்டாள்
பிச்சேறி ஞண்முருகா பெண்ணணின் பழநியிற்கால்
வைச்சேறு மந்நாளாய் மன். (௯)

## கலித்துறை.

மன்றிற் புரியு நடத்தா ரிடத்தார் மனைவிதருங்
கன்றிற் கிளையதோர் காளையை யுன்னிக் கரைந்துருகி

ஈன்றிற் கலைக்குங் குயிற்குப் பகைமிக் கலர்த்தனளை
னொன்றிற் பழநியிற் கொண்டுசெல் வீராயு மொன்றுதற்கே.

## விருத்தம்.

ஒன்பதுவாய்ப் புலைக்குடிலை மலமிகுபாண் டத்தை
யுறுகணிறை நோய்க்கில்லை யழுக்கினுட லத்தைப்
பின்பொருநா ளெரிகவ்வ விருப்பதனைப் பேணிப்
பெரிதூட்டிப் பனிநீர்கொண் டாட்டியுடை யாட்டிப்
பொன்பணிமா வயிரமணிப் பூண்களவை பூட்டிப்
பூசுவன பூசியொரு சிலர்காணத் திரியி
னென்பயனே யொன்றுமிலை நமரங்கா ளம்மி
னெய்திடலாம் பழநிமலை யிருவினையுங் கெடுமே (௭௧)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

இருவினை யிலவே யிறைவனு மிலனே
கருவினை யடைதலுங் கால முற்றுயிர்ப்
பிறத்தலும் வளர்தலும் பின்பொரு நாளி
னிறத்தலு மியல்பே யென்றறிந் திடுக
நீங்குசெய் யற்க தெரிந்தெவர் தமக்கு
மீங்குமற் றதனை யேனையோ ருனக்குப்
புரியினவ் வளவே பொருளுமை யிறைவன்
னுரிய காரண முத்திக் கியைவபோல்
வகுத்தொரு சாரார் மயக்குறக் காட்டிய
பகுத்தறி மனனே பதறி மயங்கிடல்
பாய்வரி மாவது படவே யொருத
வோய்வரி தாகி யொழுகு மதத்தி

னருவி யிழிதரு மடுகரி யந்நிலை
யொருவ மாட்டா துற்ற கனவிடை
மற்றது காணூஉ மன்ற விழித்துஞ்
செற்றவ னின்றபூஞ் சினையுடை வேங்கையை
யலைக்கும் பழநி யண்ண லுளனென
நிலைக்கும் வீடவ னிழறரு மடியெனக்
கோடி யுய்வை குறிக்கொளு நலங்கள்
கோடி கோடி குலவிடுங் காணே. (௰உ)

## வெண்பா.

காணிற் பழநிமலைக் காவலனைக் காணாது
வீணிற் பலகண்டார் வேறுள்ள—சேணிற்
கதிபெறவே வேண்டார் சுறந்தார் பலட்டா
நிதிபெறவே வேண்டார் நிலத்து. (௰ங)

## கலித்துறை.

நிலைய மருட்குரல் விந்துமுத் திக்கு நிலைகுலைந்தே
யுலைய வெதுப்புழுத் தாபாக் கினியினி னுய்திபெற
வலையு முயிர்க்கோ ரிருந்தட மன்ப ரகமலர்க்கெல்
கலைய மமிர்திற்குத் தென்பழ நிக்கோன் கழலடியே. (௰ச)

## விருத்தம்.

அடிநா ளிருந்த வன்பும் பிரிந்த
வந்நா ளவின்ற மொழியும்
மடிதே செறிந்த வின்பங் குலைந்து
பன்னூ லிருந்து பலவு

படியே யிருந்து தன்பண் ணெழிற்று
மின்றோ துயர்ந்தென் பழநி
வடிவே லமைந்த முன்பின் னினைந்து
வன்றோய் துறந்து புரவே. (௰௫)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

புரவியேழ் பூண்ட பொலந்தே ரண்ண
லிரவியாழ் கடன்மிசை யெழுதரு காட்சி
யொக்க மரகத வொண்ணிற மயின்மேற்
செக்கர் மேனி செவ்வி காட்ட
வகவிரு ரெக்கு மாறு முகக்குக
தகவிரு புறமுந் தையலா ரிருவர்
பொலிதர மேவு புண்ணிய கண்ணிய
வொலிதரு மருவி யுற்றிழி பழநி
மலையமர் பெரும மயர்வறக் கற்ப
இலைகட படமென வியம்பிய் பகட்ட
வொருசில வாரியத் துதிர்மொழி பொருக்கி
யுருவிடு இன்றே முண்மை நிலையே
மேவி யடங்கன் மேலெந் நாளோ
நாவினின் றுமை நவிலக் கற்றே. (௰௬)

## வெண்பா.

கற்று மனம்போற் கசிந்துருக வேண்டுவோர்நின்
னற்றளின் கீழ்மேலோர் நாரியர்பாற்--பற்று
யெரியி னிழுதாவ னேழையே னென்னே
பெரிய பழநியிறை பேசு. (௰௭)

## கலித்துறை.

பேசுகம் வாமனை மேமெருகன் பழநியிற் பேரொளியை
வீசுகந் தாடி புதல்வா முதல்வா விதியவுணர்
கூசுகந் தாவென் றருத்தியொ டோதுங் குறையகன்று
மாசகஞ் சேரும் வசையறு பேறும்பின் மன்னிடுமே. (௰அ)

## விருத்தம்.

மன்றாத விளமை செல்வ மற்றுநீ பொருட்ப டுத்து
மின்றாத பலவுஞ் சூழ்ந்து மினைகின்று மென்னே யென்னே
யென்றாதன் பழநி யின்பா லிருக்கின்ற னடைந்த வர்க்கு
மூன்றாத வின்பந் துன்னு முறைமையாற் சேர்தி நெஞ்சே.

## நிலைமண்டில வாசிரியப்பா.

சேயரி நெடுங்கட் டெய்வ யானை
பாகா வாகா பரமா பழநி
மாமலை மருந்தே மணியே யிருகை
யுடைய யானையை யொத்துளன் குலமத
முருவ மதமே யுற்றமௌ னமதம்
வித்தை மதமே மிளிர்பிர புத்துவ
மதமே சகச மதமே தனமதஞ்
சகாய மதமெனச் சாற்றெண் மதமிக்
கருவி யாகி யாருய்ப் பெருக
வென்னுளக் கருவை யேழையான் கண்டிலன்
சத்தி யங்குசஞ் சண்முகா கொண்டு
பாக னாகிப் பரிவினி னணைந்து
மதமடக் கிட்டு வலிமை சான்ற

வாரெழுத் தருக்கொட ரன்மயப் பூட்டி
யருட்கூ டத்தே யாரத் துவைத் திடுகவே. (௨௰)

## வெண்பா.

கைவேற் குகபழநி வாழ்வே பலவினைந்து
வைவேற் கிரங்குவதெந் நாளுவந்தாட் — செய்வேற்
கருதாய்பா லூட்டுங் கடப்பாட் டினளா
யொருதாய்பா ணிப்பாளோ வோது. (௨௧)

## கலித்துறை.

ஓதாய் பழநி யுவந்த வடிவேற்கை யுத்தமர்பாற்
போதாய் விரைந்தனை செல்லுபு கோதாய் துணைவரவர்
கோதாய் கிலாதென் மனங்கொண்ட செய்தி குறித்துணர்ந்
தீதாய் தருமூ ரவர்கௌவை யாலுற்ற தெள்ளிதினே. (௨௨)

## விருத்தம்.

தெள்ளி யோர்பணி பழநி நாயக
னிமை யென்பதே புரிய நேர்வனேற்
றெள்ளி யோர்பலர் குழுமி யேயவண்
ரே நின்றிடா ரருகு சேர்வரா
னுள்ளி யோர்பலங் கெழுமு மாவினை
யோதின் வந்திடா ரொருவ ரேனுமே
யென்னு வார்சிலர் சழுவு வாரையு
மேழை செல்லுமா றறைகு வாயரோ. (௨௩)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

அறைகட லாடை யகனில மடந்தை
நீண்முடி யாதி நேர்பொளிர் பழநி
மாமலை மன்னிய வடிவே லண்ண
லுமை மிருப்புழி நடப்புழி நிற்புழிப்
பன்னு மாக்கள் பருகு நீரு
முண்ணுஞ் சோறு முடுக்கு முடையும்
பாவஞ் செய்த பண்டொரு நாளே. (உ௪)

## வெண்பா.

நாளோடு கோளு நலியாவே சூர்முதலைக்
கேளோடு சாய்த்த கெடுவில்செவ் — வேளோ
டுறவு சிறிதேனு முண்டாயி னன்று
னுறைவு பழநிமலை யுண்டு. (உ௫)

## கலித்துறை.

உண்டே மதுவா னுயர்சோ லையினூற்றி னூற்றிடனீ
கண்டே பழநி மலைக்கா வலரையென் காதலுரை
வண்டே யினித்தாழ்த் திடிற்றரி யேனவர் வந்திடவே
பண்டேர் குறுவாய் வேண்டுதி யாலின்று பாட்டிசைத்தே.

## விருத்தம்.

இசைவருக வசைவருக வின்புறுக
துன்புறுக வென்பு சூழ்ந்த
தசையருக வுடல்விளைக்க பருத்திடுக
தண்பழநித் தரமேன் மேவுஞ்

திசைசிறுக வளர்ந்தபுகழ்த் திருக்கோயில்
புக்கிருப்போஞ் செவ்வே ளெங்கோன்
கிளையுருகு பாட்டிசைப்ப மலையடியா
ரடியாரை மேவ வோமே. (௨௭)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

மேவலர் முப்புர மேலைநாட் செற்ற
சேவக னரும்பெறற் செல்வா பழநி
வேலா காமம் வெகுளி மயக்கமா
முக்குறும் பெறிகுவை முற்படு காரணஞ்
சூக்குமந் தூலமா மூவுடம் பழிக்குவை
அதனால்,
தனைய னறிவு தந்தை யறிவெனு
முண்மை கண்டே னுன்றன் பாலே. (௨௮)

## வெண்பா.

பால்கூட் டெடுதேன் பழநியிறை மாட்டுருகி
மால்கூட் டிருமனத்தை யன்றயான்—கால்கூட்டி
நிற்பப் புரிந்து நிகளமறுத் தொல்லையினிற்
பொற்பப் புவியிடையிப் போது. (௨௯)

## கலித்துறை.

போதிற் பொலியன்ன மென்னடை யின்மொழிப் புத்தமுத
மாதிற் குயிர்பெற மையொன்று காய்நிர் மயக்கறுமோ
சூதிற் படாவெம் முலைகோடி ரன்னைநீர் சூழ்ச்சியிலீர்
காதிற் பழநி யிறைநாமஞ் செப்புபு காப்பிடுமே. (௩௰)

## விருத்தம்.

இடுகிடை மாதர் மதிக்குறும் வெறுக்கை
யீட்டலே வேண்டினை நெஞ்சே
கடுகிடை வித்தம் பெறுவதா யிருப்பிற்
காவத மோடுகின் றனைநீ
ரிடுகிடை யென்ன மிதந்தனை நீந்தி
யேறுகின் றனைகரை பழநி
கடுகிடை யாதே பழநிதி முன்னோர்
கண்டு சேமித்ததுண் டவணே.

## நிலைமண்டிலவாசிரியப்பா.

அவம்புரி மாக்க ளகம்புகா வொளியே
யின்ப வளத்தோ டிணையின் முத்தியாம்
பெறுதற் குரிய பொருட் கடலிற்
பிறந்தவா ரமுதே பிறங்கு பனிமலை
யதன்பாற் றோன்றி யவிரங் கையிலை
யரசின் மேற்பட ரருங்கொடி தந்த
மாரு மணத்து மலரே யுள்ளங்
கனிதரு வார்பெறூஉங் காமர்செங் கனியே
யிருபூங் கொடிக ளிருபுறம் படரக்
கடம்பவிர்ந் தொளிருங் கனகமால் வரையே
யுறுபிணி மருந்தா மொண்சிந் தூரத்தின்
பின்வரும் பெற்றி பெற்றதென் பழநி
மாமலை மருந்தே மான்மண விருந்தே
யவித்தை யாங்கரி யடுத்துத் தொடர
வூத்தை யுடலமா யோரிடி னைற்றுட்

புகாற் றதன்கீழ்ப் பொறிப்பெய லாக்கலை
வேட்கைநஞ் சுடைய விரிமன நாகங்
கிடப்பக் கண்டக் கிணற்றிடைப் பாவலா
யாமறு கின்வே ரங்கை பற்றி
நான்றிட வதனை நணுகிப் பாவமா
மோரெலி கறித்திட வுய்தி காணா
தயரு முயிரெனு மறிவிலி கலவி
யின்பமாந் தன்றே னிடைவிழுந் தேன்றுளி
நக்குபு சுவைமிக நன்றெண மகிழ்ந்து
தன்னிலை மறப்பிற் சார்ந்தருட் குருவாய்
மற்றவற் புரக்கு மாண்புளோ னீயே. (௧௨)

## வெண்பா.

கீரி னமிழ்வீர் நெருப்பி னிடைநிற்பீர்
நேரி லுகங்காண்பீர் நீபமலர்த்—தாரினான்
சேவடியே போற்றுமின் சேர்மின் பழநிமலை
காவடியோ டுற்றீர் கதி. (௧௩)

## கலித்துறை.

ஓடு மிருகண் ணருவி வியர்க்கு முடம்புவெம்மை
நீடு மயிர்சிலிர்க் குஞ்சொன் னழுவு நிரப்பொழியத்
தேடு மொருபொருள் கண்டெனை வுள்ளஞ் சிறந்துபொங்கு
நாடு மெமது பழநி மலையடி நண்ணினர்க்கே. (௧௪)

## விருத்தம்.

நண்பின ரேனும் வன்பின ரேனு
நயமும் பயமுஞ் செயலாமோ

வெண்கணி யாரு மொண்புன லேயு
மிசைசொள் பழநி வடிவேலா
பண்புற யாருங் கண்டுபுற நீயம்
பரிசின் னிலைசெய் வனவேயா
மண்ணிடை யாவர் விண்ணிடை யாவா
வரச விதனை யறிவாரே. (௲(

## நேரிசையாசிரியப்பா.

ஆரம் பிறக்கு மப்பொழி யத்தே
வாரம் பிறக்கு மறையுணர் முனிக்கு
மறையின் பொருத்து வயங்குமொண பொருளைக்
குறையின் றருது குமரா வமரா
பதிக்கிறைக் காப்புரி பன்னும்போர் வீர
துதிக்கிறை நின்னைத் தூய வந்தண
னென்கோ வரச னெனகோ வந்தண
னென்கு நந்தை வலமொரி யேந்து
மந்தண னென்ப தருமறை
மந்தண பாவது மன்ற வுணர்ந்தே. (௩

## வெண்பா.

உணவாற செருக்குவா ருன்னடிக்கீ ழன்பு
மணவார் பழநிமலை மன்னே — தணவார்
பொருகந் தருகின்ற கேடவற்றை யென்றும்
விரகந் தனைவிள்ளார் வென்று. (௪

## கலித்துறை.

வென்றி மதற்கு மதனும் பழநி விடலையுனைச்
சொன்றி தருகசொன் னந்தரு கென்றே தொழுதிடுவார்
துன்றிநற் கற்பகங் காஞ்சிரங் காய்வேண்டிச் சூழ்ந்திடுவா
ரொன்றினை யென்னினும் வேண்டாது தாழ்பவ ருத்தமரே.

## விருத்தம்.

உத்த மக்கவி யோதில ராயினும்
பத்தி மிக்க யரிசில ராயினு
ஈத்தி நிற்ப னலம்பழ நிக்கிறை
யத்த வற்பற் கருள லழகிதே. (௩௯)

## நேரிசையாசிரியப்பா.

அருமை குறியா தாருள் வழங்கும்
பெருமை யுடையான் பிறங்கு பழநி
மலையம ரெம்மா னொருவன்
மலைவிலை யவனை வணங்குக யாரே. (௪௰)

## முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

திருமயிலம்

# இரட்டைமணிமாலை.

---

## காப்பு.

### வெண்பா.

மயிலத் இரட்டை மணிமாலை நாவிற்
பயிலத் துணைவருமே பன்னு—மயிலற்கு
முன்வந்த செம்மன் முதுகாரிற் கொன்றையான்
பின்வந்து முன்னாகும் பேறு.

---

## நூல்.

### வெண்பா.

பூத்தாரும் பொய்கை பொலியுந் திருமயிலை
மேத்தாரும் பூத்தாரோ வேதமறப்—பூத்தார்மற்
றப்பதியின் வாழு மயிலவனைப் போற்றியிரு
மைப்பயனு முற்றார் மணந்து.

## கலித்துறை.

மணங்கொண்ட தாழ்குழன் மாதிடம் வைகவு மற்றொருத்தி
குணங்கொண்ட விற்புரு வத்தாடன் றோணலங் கூர்ந்துணையா
னிணங்கொண்ட வேலா மயிலத் துறையு நிதியுனது
ருணங்கொண்ட நல்லடி யார்பாலெற் கன்பு கொடுத்தருளே.

## வெண்பா.

அருமை யருமை யறிதன் மயிலத்
திருமை தரவிருக்கு மெந்தை—பெருமையாஞ்
சீதரன்றோர்க் கொணமருகா சேவற் கொடிமுருகா
காதரனைக் காதென்பேங் கண்டு. (௫)

## கலித்துறை.

கண்டே னினையே கருணைக் கடலெனக் கண்டபின்ன
ருண்டே யினிமற் றொருதெய்வம் வேறென வோகையுளங்
கொண்டே னெவர்க்கும் வினைதடிந் தாளனின் சொர்னையன்றே
பண்டே யொருபெண்மு னின்றுண் மயிலப் பழம்பொருளே.

## வெண்பா.

பொருளுடைப் பல்கலையும் போதவவைக் கெட்டா
தருளுடைப் பற்றுநரை யண்மித்—தெருளுடைத்
தித்திக்குந் தேனே திருமயிலத் தெம்மானே
பத்திக்கு ஞானியப் பண். (௬)

## கலித்துறை.

பண்பார் நலனில னன்போ ரணுவிலன் பைத்தலைமேற்
றிண்பார் பெறினு மடங்கா வவாவினன் றீவினையா
ருண்பார் பிடித்தொவ் வொருநாளு நைந்தே யுழல்வனெனைக்
கண்பார் மயிலத் தொருவா வுருவார் கலையுணர்வே. (௬)

## வெண்பா.

உணர்ந்தார்க் குணர்வரியா யொண்மயிலத் தெந்தாய்
பணர்ந்தாங்கு பூவிற் பரிக்கு—லிணர்ந்தாங்கு
காயத்தா லாயபயன் கண்டே னினைப்போற்ற
னேயத்தா னின்னடிக்க ணின்று. (௭)

## கலித்துறை.

கண்களந் தாமரை போன்ம்மெனப் பூத்தென் கசிவொழுகு
புண்களன் றோநின் மயிலங்கா ணவைகொற் போதவனுங்
கண்கமொ ராயிரத் தானுந் தொழுதெழு கந்தபுயத்
திண்களன் மையுடைத் தாதை யணைக்கு முயர்பரமே. (௮)

## வெண்பா.

தாதைநீ தாய்நீ தமருநீ யாவுநீ
தீதை யகற்றல் செயலுனக்கே—கோதை
குருவாகக் கொள்ளக் கொழுநனுமாய் நின்றோய்
வருவாய் மயிலத்தெம் மான். (௯)

## கலித்துறை.

மானேர் கட்குதலை பாகியர் சேரியர் மாணைவக
நானேர் நினைக்கின்ற மெய்ப்பொரு ளயில்வ குறிக்குமென்னை
கோனேர் பாவா மயிலைத் தொருவா கவலிமெனரு
கானேர் மிகவழி பட்டில னெவ்வழி காட்டினியே. (௰)

## வெண்பா.

இனிக்கத் தமிழ்பாடி யேத்திரு னின்னை
யுனிக்கற்ற நக்கீர னேனுங்—கனக்குக்கோன்
றவ்வண்ண மெல்லா மறைந்தேன் மயிலைத்தா
யெவ்வண்ண மேற்பா யினி. (௰௧)

## கலித்துறை.

வண்ணங் கரிது வெளிசெய் தியம்பி வழுக்கில்லீ
ருண்ணைக் தொருகாற் பரவீர் மயிலைத் தொருமுதலை
யெண்ணுறுங் கருமமின்றி தூமுற் றும்பய மெனவுணரு
கண்ணுறுவ பிறவிக் கடல்கடந் தேறுவிர் கற்கையோ. (௰௨)

## வெண்பா.

கடலங்கை வைத்துண்ட லையோ னிக்கண்
ணுடலம் புனகமுற வோதும்—விடலை
மயிலைத் தெளிவுத்தா மன்னுமுடைந் தேத்திற்
சயிலத் தமிழுந் தரும். (௰௩)

## கலித்துறை.

தருவாரும் விண்ணுறையும் விபுதர் தபோதனர்கள்
வருவாரும் போவாரு மாகித் திரியு மயிலமுன்னீர்
தருவாரு முண்டோ கதிபிற தேவருட் சார்திரய
னுருவாரு நான்கு சிரமேலுங் குட்டு மொருவனையே. (௰௪)

## வெண்பா.

மேலொடுகீ ழில்லான் மிருமயிலத் தாறுமுகன்
றேலொடுகீள்பாம்பணிவான்றேன் றலவன்-பாலொடுதேன்
சேர்ந்தொழுகு வாலெயிற்றென் செல்வியிவ ளென்னீது
நேர்ந்தனைய வைத்திட்டா னே. (௰௫)

## கலித்துறை.

வைக்கு நினையேதன் னெஞ்சத்தி னென்மகண் மாரனம்பு
தைக்க மெலியுமெய் கண்டுயில் கொள்ளா டருமமுது
கைக்கு நினக்குவே ளென்னுமோர் நாமங் கருதியிட்டார்
புக்கு மயிலத் தொருவா புரிந்த புதுமையென்னே. (௰௬)

## வெண்பா.

புதுவதொன்றே கற்பீர்நீர் பொய்ம்மாற்றங் கொள்வீர்
சதுரருறை மாமயிலச் சாமி— மதுவுறையு
நீபத்தா ரெந்தையன்றி நேரிழையீ ராடவர்கா
ளாபத்தார் தாநீக்கு வார். (௰௭)

## கலித்துறை,

தாதார் கடம்பணி சண்முக நாதா தருகமலப்
போதார் பரவு மயிலத தொருவா புரிந்தருணீ
தாதா வெனவிரந் துய்ந்தன ரன்பர் சழக்கனிங்கே
யோதா திருநதே ஞெருமூன்றி னெனமன மூன்றினனே. ()

## வெண்பா.

மனங்கொள்ளாக் காதலுற்றேன் மாமயிலத தண்ணூ
வினங்கொள்ளு நின்னன்ப ரேயென் --றனங்கொள்வார்
நீங்க வணைந்து நெகிழ்ந்தின்பு தாராரோ
வோங்குகவென் றென்றே யுரைத்து. (௰௧)

## கலித்துறை.

என்னே யிரங்கலை யையா மயிலத் தெனதுதந்தா
யென்னேத நீகண் டிலையோ நினக்கா றிரண்டுகண்கள்
கொன்னே மிளிர்வுற் றிலவே யடியா குறைகள்கண்டு
பொன்னே புகழே பிறவே யளித்திடப் பூத்தனவே. (௨௰)

முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பரமாசாரியர் பாமாலை.

## காப்பு.

### குறள் வெண்பா.

ஒப்பவிருப்பனைய வுசனைநா போதருமுனி
குருபரவிருபாளம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### நேரிசை வெண்பா.

சீராருந் தண்டமிழிற் றிப்பியமே சாத்தருள்
மேனாருந் தொண்டொருபோ யும்போ—காராரா
பிரணவத்தை முன்வைத்த பெம்மான்சம் பந்தன்
சரணவத்தை யாறமொழ்ச்சே சார். (௧)

அல்லும் பகலு மிவைக் குருநெஞ்சே
கல்லும் பவநோயைக் காட்டுடையுமே—வெல்லும்
பிரசமய நீபத்தார் மின்னீக்கு வைத்த
பரசமய கோளரியைப் பற்று. (௨)

உள்ளநலை மெல்லா மொருங்குவரு மென்னெஞ்சே
கள்ள வினையொழித்துக் காதலான்—மெள்ளவே
யேனப்பா நீயழுதா யென்றே யுமைதந்த
ஞானப்பா லுண்டானை நம்பு. (௩)

கண்டுபடு மென்மொழியார்க் கண்டு பலநாளுந்
தொண்டுபடு மென்னெஞ்சே தூயரினை—மண்டுபுகழ்ச்
சண்பையு யர்நகரான் சம்பந்தனை வார்கழல்க
ளெண்பையு ளிற்றுப்போ மே. (௪)

சாத்திரமி சைக்குமா சாதனங்க ளைப்பயிலக்
காத்திரமி லென்னெஞ்சே காணுமின்பு—நீத்த
மிகலிக்கோன் மாய வெரித்தோனைப் பாடும்
புகலிக்கோன் றாளைப் புகழ். (௫)

நாணுக்கு நல்லோர் நகைகொளவா றெல்லாம்
வீணுக்கு ழைக்குமென் வீறினெஞ்சே—வேணு
புரத்தான் கமலமொக்கும் பூங்கழல்க டம்மைச்
சிரத்தான் வணங்கியருள் சேர். (௬)

ஐயலம ருந்தவரு மந்நாட்டிங் கஞ்சுசெஞ்சே
நையலம ராவதிமே னம்மையுய்க்கு—மையலமண்
பாழியிறைப் போததனிற் பங்கமுறச் செய்யுமொரு
காழியிறைப் பன்னுமங் கல். (௭)

எடுங் கரமுமா யேங்கு மடநெஞ்சே
கூடுங் கருதியவை கூறுமுன—நாடு
மொருமயிலை யன்னவளா யோதியென்னை யாக்கத்
திருமயிலை புக்கவனைத் தேர். (௮)

இருவினைசம் பந்தத் தினையுமட நெஞ்சே
யொருவினை *சம் பந்தமாங் குன்னி—மருவியே
கூடலரை யன்சுரநோய் கோதகலத் தீர்த்தங்கண்
கூடலரைச் செற்றவனைக் கூறு. (௯)

இருக்கோல மிட்டழைப்ப வேனென்னுன் றன்னைக்
கருக்கோல நீங்கிடவே காட்டுந் —திருக்கோலக்
காவி லுயர்பொற் கரதாளம் பெற்றோன்பேர்
நாவி லமையநெஞ்சே நாடு. (௰)

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### கட்டளைக்கலித்துறை.

திருநா மனவ திருப்பணி செய்தவ செல்வமல்கு
† பெருநா மனவத் தொடர்பற வேகின் பெயரறைந்துங்
கரு ‡ நா மனவஃ தெழுதியு முய்ந்தனன் கண்டுகொண்டோ
மிருநா மனவணி லின்புற் றுயர்ந்திட வெம்மகமே. (௧)

நாராள மைந்த வொருபா லுடையா னலமறியா
வோராள வாமிக் குடையவ னென்று துணியெனையு
நீராள லிங்கு வரினது வன்றோ நிறையருளெங்
காராள ரேதிருத் தாண்டக மோதிட காவலரே. (௨)

* சம்—பிறப்பு.
† பெருநாமன்—அப்பூதியடிகள்.
‡ நாம்—அச்சம்.

அப்பூ டருக ரிடுஞான்று நீகவி லைந்தெழுத்தைச்
செப்பூ கமிலாச் சிறியேனு முய்யச் செயலுளதோ
விப்பூ தலத்தா ரெவரு மிரும்பூ திசைக்கவன்பி
னப்பூ திமைந்தற் கராவிடந் தீர்த்த வருட்கடலே. (௩)

பாவான் மகிழ்ந்தோ பொதிசோறு தாங்கிப் பரமனினக்
கீவான் மலர்ப்பத நோவவந் தானுறை யெங்குருவே
மாவா னவர்பணி யுந்திரு வாமூர் வருமருந்தே
தாவா வருளே தவமே தவத்தின் றனிப்பயனே. (௪)

குளத்திருக் கெண்டோண் மதிநதிகூவிளங் கொன்றைமத்தங்
களத்திருக் கும்வல் விடமுடை யானைக் கருதறியா
வுளத்திருக் கேனுக் கொருவுள வோங்க வுரையுமுத்தி
வளத்திருக் கீது முறையல வோசொலின் மன்னவரே. (௫)

ஏத மகற்றி யெழுழ்விடை யூர்தியை யேத்தியுயர்
போத மதுற்றுப் புலையேன் பிழைக்குமப் போதுளதோ
வேத மடைத்த கதவந் திறக்குமெம் வித்தகமாச்
சீத மலிந்த கருங்கட னீந்துந் தினமணியே. (௬)

விருப்பா திகளான் வெதும்பினின் றேனை வியனருளாற்
றிருப்பா திவண்விட் டிருந்தனை யேலது செய்யமன்றே
மருப்பா திரிமா தவிசண் பகம்வழை மன்னுவளத்
திருப்பா திரிப்புலி யூரிற் கரைவருந் தெள்ளமுதே. (௭)

இம்மா வசுந்தரை வாழ்க்கையி னல்வரு மின்னறமக்
கம்மா வளவிலை யாதலி னென்றே வதையகன்று
சும்மா விருப்ப னெளியே னியம்புதி சொல்லரச
கைம்மா வமணர் துயருறத் தாழுமெங் கற்பகமே. (௮)

சீக்கு மவிச்சை யெனும்பே ரிருளினைச் சிற்சபையிற்
றாக்கு மறைத்தா ளெனவுணர்ந் தேனதைத் தோமகல
நாக்கு மனந்தலை செப்பமுன் னத்தொழ நான்பயிலேன்
வாக்கு மனமெதரு ளாக்கு மினேதுயர் மாற்றுமினே. (௯)

மேதினி மங்கை தனமிவை மேற்றெனன் விருப்பதற
லேதினி யைய னருள்வரு மோவென வேங்குறித்தப்
போதினி னீரா தரித்தடி யேனைப் புரந்தருளீர்
மாதினி யார்மகிழ் காதல ரேசொலின் மன்னவரே. (௰)

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேனமருங் குழலுமையுண் கமலநிகர்
விழிகளுமை தீரு வாவின்
வானமருங் குலவுவிது முகமுமுடைத்
தந்திடையார் மகிழ்ம ணாள
ஞானமருங் குங்குமநன் கணிபமல
வடியேற்கு ஞான நல்கா
யேனமருங் குறித்தநகு வாரெனையஃ
தழகோவெம் மெழிலார் கோவே. (௧)

ஒற்றிக்கு வந்தொருத்தி நலந்துய்ப்பான்
மகிழடியி லுரைத்த வாய்மை
யற்றிக்கு வேளொரித்தாற் காண்பாக்குத்
திருவாரூ ரணையு மார்வம்

பற்றிக்கு ழைந்துருகிப் போதாறு
மிழுக்குமவை பாடிப் பெற்றாய்
பெற்றிக்குத் துறவினரி னீயிக்க
தெவன்புகல்வாய் பெரிய கோவே. (௨)

தேங்கமலர் விழிவார முப்போது
மெப்போதுந் திகழ்ந்து பெம்மான்
பூங்கமல பதமினைந்து நினைந்துருகி
நையுமன்பர் புகழ்ந்தஞ் சேங்க
வோங்கமலை கதியெய்தி னடைந்தபெருந்
தகையேசே யோர்ந்தாங் காமற்
றாங்கமல மொழிந்தருள்வாய் சுந்தரனே
தேவர்தொழுந் தூய கோவே. (௩)

சுந்தரவன் றொண்டரி மறைக்குமுடி
யணியுமடி சுருதி நாதன்
மந்தரவ ரைக்குமுயர் தோளுடையா
யாளுடையாய் வனப்பிற் பெற்ற
முந்தரவ சங்கணனே யங்கணனே
யென்றுபல வோதிக் கூவு
மந்தரவப் படிவோர்க்குஞ் சூட்டானென்
னைறதிதிரு வாரூர்க் கோவே. (௪)

கம்பியா நின்றசென்றன் மணமாயைச்
செயஞெக்கக் கருத வெங்கை
நம்பியா ரூரவரு மறைச்சைவ
மோங்கவரு நாத நின்னை

நம்பியான் சரண்புகுந்தேன் காத்தனையே
லெச்சுற்ற நண்ணு மன்றேல்
வம்பியா னியாவருனைத் தடுக்கவலா
ரெங்குருவே மாதர் கோவே. (௫)

பூமாது முடியெனவே கோடலினு
விரும்பொறையைப் பொற்பத் தந்த
தாமாது லங்கியவே தண்டத்திற்
சொலுமார்றாற் றடுத்தாட் கொண்ட
மாமாது வதியிடத்தான் றாதாக
நடக்குமா மகிழ்ந்து செய்தாய்
நாமாது போற்றுநம்பா விப்பேறார்
பெற்றார்சொன் ஞானக் கோவே. (௬)

தித்திக்கு மருஞ்சொற்க ளமைதியொடு
தொடுத்தணியத் திரும்பா வண்ணை
முத்திக்கு நினைவிடுத்த முக்கணுடைக்
கரும்புதனை முன்னித் தாழு
மத்திக்கும் வரமளித்த முறைநோக்கி
நாயேனை யாட்கொள் வாயா
லெத்திக்கும் பரவுநம்பி யாரூர
நங்குரவ வின்பக் கோவே. (௭)

ஒருமுதலை யுடைத்திருந்த வலமெனவே
கருதுமவ ரூதி யத்தை
யருமுதலை வைத்திட்டக் கருதுமவ
ரெனவுணர்த்த வவத ரித்தோ

யிருமுதலை யுண்டபா லனையழைத்தோய்
பிறவிவலை யினினான் சிக்கி
யுருமுதலை யொலிகேட்ட வரவின்மெலி
யத்தகுமோ வுண்மைக் கோவே. (௮)

எட்டுணையா மன்பேனு மில்லாதே
மாயிடினு மிரங்கிச் சோகங்
கட்டுணையா திருத்திரென நீமுன்வந்
துரையாபேற் காதலோயெம்
முட்டுணையா ருளரோன்பா னிரதமூடக்
கவிவல்லோ யுழைடைய யன்ன
கட்டுணையா விசைஞானி களிக்கவருஞ்
சுந்தரனே கருணைக் கோவே. (௯)

கோலஞ்சா னாளைக்குள் ளாகிமினார்
தங்கடிப்பூங் குழலி னாலுங்
கோலஞ்சா லாலிலைமே னகிலாலுந்
துகிலாலுங் கூரம் பேய்க்குங்
கோலஞ்சார் மையெழுதுங் கண்ணாலு
மறிவழிந்து குணங்கெட் டேனைக்
கோலஞ்சாய் முடியுடையான் றாட்பெற்றோ
யாதரிப்பாய் கோதில் கோவே. (௰)

## மாணிக்கவாசக சுவாமிகள்.

### நிலைமண்டில வாசிரியப்பா.

சீதப்புனலார்செல்வினையேவி
வேண்டுமெமையம்விரும்புமவ்வளவ
நீரீந்தளித்தநீர்மைகருதிப்
பாகசாதனனைப்பரிவுடனணைந்து
வந்தனஞ்செயவேவானுறநிவந்து
சாலிகள்வளர்தரச்சங்கமார்க்கும்
பண்ணைசெறிந்தபதிதிருவுத்தர
கோசமங்கையினிற்கோதையோர்பாக
னுயிர்களாம்பயிர்களுலைதனோக்கி
யருண்மழைபொழியவரிதினின்விடுக்குங்
கனமேதவமேகன்னலின்சுவையே
வாதவூரின்வருமருமருந்தே
பெருந்துறைபுகுந்துபேரின்பக்கடல்
கோப்பக்குளிருங்குணப்பெருங்குன்றே
கூடற்கோமான்குறித்தாங்களவில்
கவனவாம்பரிகளாக்கண்ணுதலரிய
கோத்தவர்குனித்தகுழகன்கொணரச்
சாற்றியதிருவேதருவேகுருவே
காணுறின்முத்தியைக்கையிலாமலக
மென்னவேயுதவுமிசையினன்மிக்க
புலியூர்மேவும்பொக்கமின்மறையோ
ரகங்களிகூர்தரவாரெழின்மடந்தை
மூகைதீர்த்தருளிமூண்டெழுபுத்த
ரகந்தையொரீஇயாங்கரன்றாளிணையைப்

பரவிநின்றேத்தப்பண்ணுமெங்கண்ணே
பாடிகாவலுட்பட்டியானிருக்க
மாயையென்னுமலியிராப்போதின்
வாதனைக்கள்வரென்மனையகம்புகுந்து
மேயமதியெனும்விளக்கினையவித்து
மெய்ந்நிலைச்சாளிகைவேறறவுடைத்துள
பொருள்களைக்கவர்ந்துபோயினரன்றே

அதனால்,

நெஞ்சகம்புலர்ந்துநெடுங்கடலிடைப்படுந்
துரும்பினெங்கெங்குஞ்சுழன்றுவருந்தி
யென்னையுமறந்தெதன்னின்னுயிர்க்குயிரா
நின்னையுமறந்துநிலைமைகெட்டேனு
லிப்போதாயினுமின்னருள்கொடுத்திவ்
வேழையைக்காத்தியின்பமார்தரவே.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சொக்கலிங்கசுவாமிகள்

# வெண்பா.

---

## காப்பு.

### வெண்பா.

சொக்கலிங்க தேசிகனார் தூயபுகழ் வெண்பாவின்
வைக்க விரும்பி மனத்தமைத்திட்—டிக்கணமே
சேர்தும்பி கஞ்சுகம்போற் றேமொழியா ளீன்றெடுத்த
வோர்தும்பி கஞ்சத்தா ளோர்க்கு.

---

## நூல்.

### வெண்பா.

கங்கைசேர் கோடீரக் கண்ணுதலோ யேயிரங்கிச்
சங்கைதீர் ஞானமருள் சற்குருவா—யிங்குநீ
வந்தா யெவர்தவமோ மாசொக்க லிங்கவள்ளா
லெந்தா யெளியேற் கிசை. (க)

காமனப்பு ணைக்கவரு காளைப் பருவத்து
மாமனப்பு ணைக்க வகையுளதோ—நீமனத்துக்
கல்லார் கருதாக் கனசொக்க லிங்கவள்ளா
னல்லா யெனக்கு நவில். (உ)

பெறலாவ தென்னேயோ பேழ்கணித்தாற் பின்னே
தெறலாவ தின்னே செருக்கின்—றுறலாகு
மெஞ்ஞான மெல்லு மிளிர்சொக்க லிங்கவள்ளா
லெஞ்ஞான்று நேரு மிது. (௩)

§ வெளியநீ ரூர்ந்தவயில் வேற்கண்ணார் மோகந்
தெளியநீ ரோராது செப்பீ—ரொளியுரு
மோக்கந் தெரித்த முதுசொக்க லிங்கவள்ளா
னூக்கங்கொ டுத்தே னுமை. (௪)

ஊன்றுபதத் ‖ தைந்துமல மொன்றமிதித் தோனை †மும்
மூன்றுபத்தி யாலுறவே முத்திநெறி—தோன்றுமா
லென்றுயா லஃதறியே னெஞ்சொக்க லிங்கவள்ளா
லென்றுயா வாய்நன் கியம்பு. (௫)

---

§ வெளியநீறு அஞ்சனமென்பாருமுளர்.

‖ ஐந்துமலமாவன:—ஆணவம், காமியம், மாயிகம், மாயேயம், திரோதானம்.

† நவவிதபத்தியாவன;—சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்மநிவேதனம்.

பஞ்ச மலங்களைவ பான்மதியார் வேணியரன்
கஞ்ச மலர்ப்பதமே காண்மினென—நெஞ்சமுற
வோதுங் குரவனீ யுற்றாய்பின் சொக்கலிங்க
யாதுங் குறையிலமே யாம். (௬)

காம்பணியுந் தோளுமையாள் காணப் பொதுநடஞ்செய்
பாம்பணியுஞ் செல்வன் பதமலரைத்—தாம்பணியு
நற்றவமுள் ளார்யாரு நாடுசொக்க லிங்கநினைப்
பெற்றவமுள் வாரார்நீ பேசு. (௭)

பஞ்சுகந்த மெல்லடியாள் பங்கன் பதமலரை
நெஞ்சுகந்து கொள்ள நெறியுரைத்தே—யஞ்சுகந்த
நாசமுத்தி யென்பாரை நாவடக்குஞ் சொக்கலிங்க
மாசமுத்த ரங்கருணை மன். (௮)

குஞ்சரத்தைத் தந்த குழகனையுட் கொண்டெரிக்குப்
பஞ்சரத்தைத் தந்தபழி பட்டமதன்—வெஞ்சரத்தை
மாற்றுகவென் றுற்றவெங்கண் மாசொக்க லிங்ககுரு
காற்றுகளுண் டென்சிரத்தே காண். (௯)

மோதகத்தைப் பாகோடு முக்கனியை யுண்டுமெகிழ்
போதகத்தைப் பெற்றபரற் போற்றிமிய—பாதகத்தை
யோட்டுங் கடிதினென வுற்றசொக்க லிங்ககுரு
காட்டுங் கதியொன்றே காண். (௰)

வந்தனைபான் மேவாமை மன்னக் கருதுவார்
கந்தனையீன் றோனைக் கருதுவர்கோ—விந்தனையோ
கற்பா ரெனவிசைத்த காசில்சொக்க லிங்ககுரு
பொற்பா ரடியெம் புனை. (௰௧)

உருகனைபான் மேவாமை யோர்வார் மயிலூர்
முருகனையீன் றேனையே முன்னிச்—சருகனைய
தெய்வம்பே றென்ற திவ்யசொக்க லிங்கனை
மெய்வந் தனைபுரியு மேல். (௱௨)

பங்கொன்றைத் தாராய் பரமா பழம்பொருளே
யங்கொன்றைத்தாராயென் றம்பிகையன்—பங்கொன்றத்
தந்தவனை நாமெனச் சார்சொக்க லிங்கவுன்னிற்
றந்தவனை யன்பினளோ தான். (௱௩)

வேளை யெரிக்கு விருந்திட்ட பெம்மானை
நாளை யெனவிருப்ப நாடாதிவ்—வேளையே
யுன்னுகவென் றெம்மை யுறுசொக்க லிங்கவள்ளன்
மின்னுகழற் கால்போற்று மின். (௱௪)

மாயத் திரிபுரமு மந்தகா சத்தெரித்தோன்
காயத் திரிக்குரிய கத்தனென்று—பாயத்தி
னுண்மை யுரைக்கு முயர்சொக்க லிங்ககுரு
தண்மை யுடையாய்நீ தான். (௱௫)

செஞ்சரண மேவாதார் செல்வவரண் மூன்றுமொரு
பஞ்சரண மென்னவே பண்டெரித்த—நஞ்சணியுங்
கண்டனல துண்டோ கடவுளெனுஞ் சொக்கலிங்க
தொண்டனல முற்றேன் றொடர்ந்து. (௱௬)

பாத கமலத்தைப் பாற்றப் பரசிவத்தின்
பாத கமலத்தைப் பற்றுகவென்—றோதவே
கன்றுள்ளு மாவிற் கனிந்துருகு சொக்கலிங்க
மன்றுள்ளு மென்மனத்தை மாற்று. (௱௭)

பதியி னியலும் பசுவியலும் பாசச்
சதியி னியலுநன்கு சாற்றி—மதியின்பா
னின்று விளக்கு விமலசொக்க லிங்கவள்ளா
லின்றுனக்குக் கைம்மா றிவண். (௰௮)

வடியேறு சூலத்தெம் வள்ள லருளால்
படியேறு மேலோர்தம் பற்று—மிடியேறு
பூரியர்க்கா மென்ற புனிதசொக்க லிங்கமெனு
மாரியனின் றாளென் னகம். (௰௯)

பொத்தார் குரம்பைக்காய் புக்கிரையே தேடினீர்
மத்தார் தயிரின் மனமுடைந்தீர்—வித்தாரம்
வேண்டா மெனவடுத்த வீரசொக்க லிங்கமெனு
மாண்டா னடியெம்பற் றாம். (௨௰)

அண்ணலெனப் பாடுகவா யஞ்செவிக ளேகேட்க
கண்ணவனைக் காண்க கருதுகநெஞ்—சுண்ணைந்து
தாழ்ந்திடுக சென்னி தருஞ்சொக்க லிங்ககுரு
வாழ்த்திடுக வென்றெண் மதித்து. (௨௧)

சென்னைப் பதியிற் செகமுய்ய வேயமர்ந்த
வென்னைப் புரந்தா ருணர்வுடையா—ரென்னையா
னேத்தவெற் குங்கோ லினியசொக்க லிங்கவள்ளால்
காத்த லுனக்கே கடன். (௨௨)

பிஞ்ஞகனைப் பேணிப் பிறப்பறுப்பப் போதுமினோ
பொய்ஞ்ஞெருகவே யாம்புகன்றோம் போதுமினோ-செஞ்ஞவிலுஞ்
சென்னையுளீ ரென்னவே சேர்சொக்க லிங்கமெனு
மன்னையுளீர் நண்பீர் மதித்து. (௨௩)

மாதர் மதிக்க வருசெல்வந் தன்னையே
நீதர் மதிக்க நெறியின்று—லேதமெலா
நீங்கவிடா வென்ன நிகழ்த்துசொக்க லிங்கவள்ளால்
பூங்கமலத் தாளெம் புகல். (௨௪)

* துளம்படுமூ ரற்செவ்வாய்த் தோகையரா லின்ன
லுளம்படுமே யென்றுகவ லுற்றேன்—களம்படுமா
நஞ்சகல விங்குவந்தோய் நஞ்சொக்க லிங்கருரு
தஞ்சமிரு தாட்கமலந் தாம். (௨௫)

மெய்யெல்லாம் விட்டு விரிகுழலா ரிற்பட்டுப்
பொய்யெல்லாங் கொண்டவிப் போட்கனேன்—மெய்யரு
ளுய்யவழி யொன்று முயர்சொக்க லிங்கமெனுந்
துய்யவழி யாகலமுஞ் சொல். (௨௬)

பாலோ மொழியிவட்குப் பச்சிளநீ ரோகொங்கை
சேலோ விழியென்னச் செப்பிமோ—மாலோடச்
சிந்தனைநீ செய்வாய் சிவசொக்க லிங்கவள்ளால்
வந்தனையான் செய்ய வருத்து. (௨௭)

வண்டோ குழலிவட்கு வட்டோ நகிலங்கற்
கண்டோ மொழியென்னுங் கைதவருக்—குண்டோவோர்
செய்கை யுறுதியுறத் தெய்வசொக்க லிங்கவள்ளா
லுய்கை கருதி யுரை. (௨௮)

---

* துளம்—மாதுளம்.

விலக்கைக் கரிய விறலுடைய மாத
ரிலக்கைத் தவிர்ந்துய்வ தென்றோ—மலக்கைய
ரெண்ணா வருமருந்தே யெஞ்சொக்க லிங்கமெனு
மண்ணா வருணீ யடுத்து. (௨௯)

எகநா மென்று திடும்பைக்கே கொள்கலமாந்
தேகநா மென்றே திரிவார்மா—லேகவே
யுண்மை நவிலு முயர்சொக்க லிங்கவள்ளா
லண்மை யுனக்கே யருள். (௩௰)

சகுடநீ ரென்னத் தரணிவாழ் தக்கோர்
புகுதவே வீடாகும் பொக்க—மிகுதகா
ரேகவே காடா மெனுஞ்சொக்க லிங்கமெனு
மேகனே யெங்க ளிறை. (௩௧)

கன்று குணிலாக் கனிவிளவி னின்றுகுத்தோ
னன்றொருகண் கொண்டங் கருச்சித்த—மென்மலரைச்
சற்றேனு மோர்தியெனச் சார்சொக்க லிங்கநின்சொ
னற்றேனுங் கண்டுமென்பே ஞன். (௩௨)

பத்துடையார்க் கென்றும் பணிபிறைநீர் தாங்குசடைச்
சித்துடையார் மிக்கெளியர் தேர்ந்துய்வீர்—பித்துடையீ
ரென்றிடித்துப் பல்கா லியம்புசொக்க லிங்கவள்ளா
னன்றியறி வில்லெனையு நண். (௩௩)

---

“பத்திலனேனும் பணிந்திலனேனும்” என்றார் ஆளுடைய வடிகளும்.

மாலை மதிக்கண்ணி மாதேவற் போற்றலே
வேலை யெனக்கொளுமா விஞ்சையினைக்—காலையே
மேவிக் குறியெனச்சொன் மெய்யசொக்க லிங்கவள்ளா
லாவிக் கொருதுணைநீ யாம். (நடச)

‡ கோது குலமுற்றூர் குன்றவில்லி தாட்கமலப்
போது பணிகற்றூர் போற்றிலார்—மாதுயரை
மன்னினரா லென்னாவின் மாசொக்க லிங்கவள்ளல்
பொன்னினவிர் தாளைப் புகழ். (நடரு)

நிற்கு மவையெல்லா நேரிழையோர் பாகனென்றோர்
கிற்கு மதியினரே கேடிலார்—சிற்குணத்த
ராவா ரெனவிசைத்த வன்பசொக்க லிங்கவள்ளால்
காவாய் மனநீ கரைத்து. (நடசு)

இண்டைச் சடைமுடியெம் மீசனையே பண்புடையீர்
பண்டைச் செருக்கொழியப் பற்றுமினென்—றண்டை
யிருந்து மதிபுகட்டு மெஞ்சொக்க லிங்க
மருந்து நினதுமொழி மன். (நடஎ)

அருள்பழுத்த நீஞ்சொ லணுகிக்கேட் டாரியார்
தெருள்பழுத்தன் ஞேரே சிறந்தார்—மருள்பழுத்த
சில்லோ ருனையணுகார் செல்வசொக்க லிங்கவிவ
ரில்லோ ரலர்போகூ பூீங்கு. (நடஅ)

---

‡ "கோதுகுலம்-குதூஹலம்;—கோதுகுலமுடைய பாவாயெ
முந்திராய்" என்றூர் பிறரும்.

# சொக்கலிங்கசுவாமிகள் வெண்பா.

உம்மை யொருகா லுணர்ந்தடைந்தா ரெக்காலு
மம்மையப்பா வென்றே யருகிருந்தார்—செம்மையே
யோர்ந்தா ருயலாறு ருற்றசொக்க லிங்ககுரு
தீர்ந்தாரியார் நல்லோரைச் சேர்ந்து. (௯௯)

முற்றத் துறந்திட்ட மோனத்தீர் சாதனங்கைப்
பற்றப் பரம்பொருளின் பான்மையினைச்—சொற்ற
வடிவின்ஞா னத்தீர் வருசொக்க லிங்க
வடிகளுமைப் போற்ற லழகு. (௱)

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பன்னிருபாட்டு

## காப்பு.

### குறள் வெண்பா.

அத்திமுக னாறுமுக னத்தனன்னை யாண்டகுரு
பத்திமிக வுள்ளிருப்பார் பார்.

## நூல்.

### ஆசிரியப்பா.

### [வறுமையின்பயன்.]

மேடமா மதிக்கண் மேவுமோர் நண்பகல்
கானடை நடந்து காவதம் பலகடந்
தாதபந் தெறலா லம்ம வருந்தித்
தடித்துத் துடித்துத் தொன்மர மொருவன்
காலூஉ வொதுங்கிக் கால்வெதுப் படங்கி
நிழறரு மின்ப நேர்பட் டாலென
வொருபொரு ளில்லென வோடி யுழைத்து
பற்றது வேண்டி மனைநந் தார்க்கே
பெற்றுழி யின்பம் பெருகு மாதலி
னின்மை வேண்டி யிருத்தலு முரித்தே
பின்னெவ் வொன்றுப் பெறலா யிடினே. (க)

## [வாழ்க்கைநலம்.]

*நிரப்பெனு மல்ல லீக்க லில்லா
ராவினைக் கண்டமற் றதன்கண் றென்னக்
கண்டு களிப்பக் கரவா தீயு
நற்குடிப் பிறப்புடை நல்லோர் சில்லோர்
நாளது சின்மையு நவில்பிணி வன்மையு
நோக்கிநல் வழியி னேவொரு வர்க்கு
முருவகை யொண்பொரு ளுலவா தீட்டு
நீரவ ரொருசிலர் நிலத்துமா னிடர்க்கே
யுரிய தாகி யுருதமுன் பெரிது
முற்றுழி நீங்குவ தொன்றுமாம் வேட்கை
யென்னு மதனுக் கென்றும்வே ராகி
மனத்தொடு மனத்தினை மன்றப் பிணிக்குங்
கட்புல னாகாக் கனிவெனுங் கயிறு
வெண்டா தின்றொடர் மேதகு பட்டு
முடிச்சென வொருகவி முன்பணி யுறவே
கழறிய கழிபெருங் காதன்மிக் கொத்த
கற்பினும் பொற்பினுங் கன்மகள் பொன்மக
ளென்ன லாகு மில்லக் கிழத்தியோ
டருநலந் துய்க்கு மாண்டகை யோர்மிகச்
சிலரிவ ருண்பது சின்னா ளீண்டு
வாழ்தல் குறித்தே மற்றை யோர்பல
ருண்டுண் டிறங்க வுயிர்வாழ் குநரே. (௨)

---

* இஃதுபசாரவழக்கு.

## [மாதர் தன்மை.]

பெண்கா ளுமது பெற்றி நன்றே
கவற்சி யின்றிக் கையற வின்றி
யெமது மனங்கிளர்ந் தியாங்க ளிருப்புழி
யைய முறுவீ ரகன்று செல்வீர்
கூசி நிற்பீர் குற்றுயிர்ப் புக்கும்
பறக்கும் பாவின் பஞ்சி னிழலென
மாறுவீர் குணனே மனத்திற் குறையற
வுமைமகிழ் வித்த லொல்லா தாயினு
மலக்க ணுற்றியா மழிந்தக னைந்து
முகமிகப் புலர்வுழி மூண்டது கண்டு
தேற்றற் கமரர் தேடி விடுத்த
வணங்கென லாம்படி யாற்றுவீர் துயரே. (௫)

## [குருவழிபாடு.]

உலக முவக்கு முலப்பில்பண் டாரமா
மாமறை யாவு மன்ற வோதினேன்
புரைதபு தன்னிலை பொய்யின் றுணர்ந்தோன்
மனைவாழ்க் கையெனு மலிவ்வி யிடங்கர்க்
குலைந்து மாழ்கு முயிரெனு மதமா
வுய்ந்துபோ மாறே காத்தற் குரியோன்
காண்டகு குருவாங் காதன்மிக் கன்னோ
னிருப்புழி விதுர னிற்புகுந் தவன்றரு
மேழைப் புல்லுணு வேற்றுக் கொள்ளற்
கீரிரு கரமுஞ் சாலா வென்றே
கிளர்ந்த வாயன் கேழ்கிளர் நிறத்து
மாவுறை மார்ப னென்ன மதித்திர்

சினமீக் கொள்ளிற் சிரித்து மூவரண்
பொடித்த வேதியன் பொக்கமி லியம
நியம மாதன நேரிது வளிநிலை
தொகைநிலை பொறைநிலை சோர்வற நினைதல்
சமாதி யென்னச் சாற்றுமெட் டுறுப்பி
னியோகு முற்றி யோர்வரு மைவர்க்
கொருதனிக் கொழுநனு மனமெனு மொட்டல
ஞேட்டமாட் டங்ளொலைத் துறுகுற் றேவல்
செய்யனின் றிடுமா செய்குந ரிதய
மலர்மிசை யேகி மற்றவ ருறவின்
மகிழ்பவ னென்றே மதியீர் கோடிர்
தொழின்மேற் கொள்வழித் தொல்லை நாட்டொட்
டாக்கலு மாயு ளறுதி யிடுதலுங்
கருமமாப் பெற்ற கடவுளுன் முகனென்
றெண்ணுதி ரென்ப வறிவோர்
மற்றிது குறிக்கொண்மின் மாநிலத் தீரே. (௪)

## [மாந்தர்பொதுவியல்.]

மேழி பிடித்து மேலதன் வழிவரூஉ
முழவன் றனக்கு முறுமெண் ஞைய்ந்தாய்ந்
தூவணைத் தபரு மவ்வா ணிகற்கு
நூலுங் கையுமா னொடிப்போழ் தொன்றும்
பாழ்படா வகைபயில் பண்புமீக் கூருந்
தத்துவ மாயுந் தகவோன் றனக்கு
மரியணை யேவு மரையன் றனக்கு
மெத்தகை யோர்க்கு மிருப்பன பொதுவே
யன்பு முழைப்பு மானமா னமுமே. (௫)

## [அவாவின்மை.]

ஓரெண் ணிரப்பிய வுளங்கொளீஇக் கவன்று
கண்படை கொள்ளார் கைதவ மாற்றி
வண்டெனச் சுழன்று வருந்திப் பன்னா
ளீட்டிப் பன்முறை யெடுத்தெடுத் தெண்ணிட்
டொருசில வைக லூசலின் வைகித்
துய்த்தல் பெறாஅர் தொலைக் கடும்பி
னிடும்பை தொலைத்திடா ரீறில் பெருங்குணத்
தெந்தை யடியார்க் கீந்தோம் படைகொண
டுய்யார் வினைய துலப்பவே றாகி
யுரிமை யின்றி யொருபொருண் மேற்சென்
றேறுவற வழக்கிட் டுறுதம் பொருளெலாம்
போக்கி யாண்டைப் பொலிவழிந் தியாரு
மெட்டிச் சுட்டி யிவர்கதை கேளுமென்
றேசிப் பேச விருப்ப ரம்ம

அதனால்,

காரிற் பெருகிக் கரைபுரண் டோடலுங்
கோடையின் வறந்து கொதித்தலு மில்லாச்
சிற்றாறு வேண்டிய சிறவற் போன்று
சின்னாட் பெருக்கமுஞ் சின்னாட் சுருக்கமும்
வேண்டலி ராகி வீவது கருதி
யிருத்தி ரிந்நிலத் தென்னண் பீரே. (௬)

## [அவையஞ்சாமை.]

கற்றன வுலகிர் கைகொடுத் திடவே
யவைமண் ணுறுத்து மாற்ற லுடையார்
சிலவ ரன்றே சேர்வதன் றத்திற

வைரொடு பிறப்பதே யாருமென் றெண்ணலிற்
பதின்மர்க் கொருமொழி பகர வேண்டின்
மெய்ந்நடுக் குற்று மிளிர்கண் ணிரண்டு
மிருண்டு நாநீ ரின்றி வற்றிக்
குழறுவ தென்றனர் கொல்லோ வென்னைக்
கழறுவ துண்டென லன்றிக் கழறிய
தொன்றுமின் றாக வுளங்கவன் றொழிகுந
ருளரே யாயினு மோரா யிரவர்
குழுக்க ணெழுந்து கொன்னே யெழுதலைப்
பேச்சிற் றவறிய பெற்றி கண்டெவ்
வெவரு நகைப்ப விடருறு மவரை
நோக்கி, "நண்பீர் ! நுவல்வது கேட்டி
ரென்னைக் காணூஉ வின்று சிரித்தீர்
நன்றிது நன்றென வென்றொடு நகைத்தற்
காமொரு நாளு மண்மையின் வருமே
காண்டி" ரென் றங்ஙனே காட்டித் தன்பெயர்
திக்குற நாட்டிய சீர்சால் வாக்கியு
மூண்டென் றறிதி ரூக்கிக் கொண்டது
விடாதுதன் னாற்றலின் வீறிவ் வளவின
தென்றுணர்ந் துறுதிகொண் டெதிருள வொருவனைப்
பதுமைபோ னோக்கிப் பாங்குள வவைபுகும்
பண்புடை யாளன் பல்சிறப் புறுமே. (எ)

## [புலவர்சிலவரியல்பு.]

ஈந்திடிற் குறையு மிருநிதி யென்றே
யிவறியார் செல்வ மீர்ங்கட னீரே
மற்றது சொலற்கு மழையெனப் பொழிகுநர்

தாமு முளராற் றூவறப் பன்னூல்
குளக்கரைக் காக்கைபோ லன்றிக் குணனு
மாற்றலும் படைத்த வறிவோர் பாற்செலீஇக்
காற்கடைத் தவண்டு காலா விட்ட
கையாற் புரிந்து காலையிற் கற்ற
வீயக் குறைவுறு வெழின்மிகு கல்வி
குடத்துறு விளக்கெனத் தடற்றுறு கூரிய
வாளென விளங்கலா வகையவ் வியத்தாற்
பிறர்க்குத வாத பெற்றி யோர்வயி
னொன்று கொள்வா ருலகிலின் றுமே. (அ)

## [தாயின் அன்பு.]

ஊற்றுகொ ளன்ப ருள்ளக் கமலத்
தினிது வைகு மிறைமார் பிடங்கொண்
மலர்மேன் மங்கையின் மன்னுமோ ரஞ்சந்
தளிர்போன் மேனித் தைய லொருத்தி
யீரா றட்டைப் பிராயத் திளையாள்
வயிறு வாய்த்தனள் வயாவுற் றனளே
யூணுட் கொள்ளா ளொருசிறி துற்ற
மெதிரெடுத் தெய்த்தன ளிருந்திருந் தொல்கித்
துயின்றனண் மயிலெனத் துறுபஞ் சணையின்
மெல்லிய விளைத்தனண் மீது நரம்பு
பைத்தன சூலும் பைய முதிர்ந்தாண்
மற்றது காணூஉ மன்ற விரங்கி
யாடவர் பலரு மம்ம குரீஇயின்
றலையிற் பனங்காய் தங்குமே கொல்லெனக்
கோதையர் பலருங் கொடிக்குக் காயது
தாங்கருப் பரமோ சாற்றுமி னென்னத்

தளர்நடை யெய்திக் தருமீ னைந்தா
மதிவந் தெய்த மதிநுத லேவற்
றைய கோவென் றலறி விம்மி
வெயிலிற் புழுவென வெம்பித் துடித்து
வேதனை கைம்மிக வேலுறா உ மானென
வெய்துயிர்த் தழுது வேர்த்துமெய்ந் நடுக்குற்
றொருகால் கல்லறை யுற்ற தெனவு
மெமபுரங் குரோச மிவளுக் கெனவுங்
களைத்துக் கண்கள் காணு வாகச்
செவிகே ளாது தெய்ய மாழ்குழிக்
குழவியி னழுமொலி குவாவெனச் சிறிது
செவிபுக் குறைப்பச் சேண்விளங் கொருமுத
லொருத்தி பிடிப்பவு மொருத்தி யடிப்பவு
மெளிய ளாகிவந் தெடுத்தடுக் குறிக்கண்
வெண்ணெயுண் ஞான்றுசெய் வேணுகா னத்தாற்
பட்ட மரந்தளிர்த் தாங்குப் பதறுளம்
பூத்துடல் பூரிப் பெய்தப் புரிந்துதான்
முன்புறு துயரெலா முதலிலாக் கனவென
வெண்ணி யின்பப் புணரியி லாழ்ந்தனள்
பின்னம் மகவைப் பேணிக் கண்ணெனப்
போற்றி வளர்த்தனள் பொருண்மற் றதன்மே
லோரீ யிருப்ப வொரோவழி நலிகொள
வெண்மிகுந் தாங்கே யேற்றுக் கைக்கு
மருந்து மருந்தி வருந்திப் பன்னு
ணல்லுணு வெறுத்து நாடினள் குணனே
குறியெதிர்ப் பென்னே குவலயத் தியற்கை
யிதுவே காண்பீ ரெம்ம னோரே. (க)

## [மக்கள் இயல்பு.]

வலைவினை மாக்கண் மன்னிக் கட்டு
மாத்தி னேரு மனமெனக் கடுகிச்
செல்லூத் திமிங்கிலஞ் சிறப்புடை மலங்கு
சுறவொடு பன்மீன் றொகுதி கொள்ளாக்
கரையது நோக்கிக் காண்டகு வீடு
காதலித் தீண்டுங் கைலையை விண்டு
தருமகள் வெருக்கொளத் தன்கைந் நிரையி
னெடுக்கு மரக்க னெறுழ்வலி தொலைத்த
விண்டு வில்லிமெய் யடியர் குழாமென
வறுபதின் மூக்கா ணாழிகை யளவு
நாடொறுங் கூவி நாடி யோட்டும்
பாண்டி விழுத்துப் பாடுற் றலைந்து
மந்துரை புகுது மாவின் குழுவென
வல்விரைந் தோடும் வளமிகு பொருணிறை
பட்டினஞ் சேர்பு பாலுறூஉம் படர்கல
மலைகட னடுவெ ணடித்தடித் தலைக்கும்
புயலி னேரூறும் புகாதமர் கிற்கு
மாயினு மிளைஞ ரயர்ந்தினி திருப்பதி
னெப்புயற் கொடுமையே யடுத்த தென்னு
வென்னுவ ரிந்த விருநிலத் திடத்தே. (௰)

## [அறிஞர் அடக்கம்.]

பலகற் றேம்யாம் பலகற் றேம்யாம்
பண்டை நூல்கள் பலகற் றேம்யா
மைய வுணர்வெமக் கைய வைந்தை
யளவு மின்று லறிதியென் றிசைத்துத்

தம்மின் மிக்க தகையுறு பண்டிதர்
தறையி லின்றெனத் தருக்கித் தலைநிமீஇ
மகிழ்ந்து கற்றோர் மதித்தன ரிருப்பவுஞ்
செயிர்தீர் காட்சிச் சீரிய ரொருசிலர்
சாணீ ளத்தது தங்கு மாயு
ளோத்தறிந் தேமிலை யோத்துறுப் பறிகிலை
நியாயமீ மாஞ்சை நீடிய மிருதி
புராண மிவற்றைப் புரைதப வாய்ந்து
போதுநற் போதாப் போக்க இல்லேன்
தமிழ்மறை யோதிலேன் தகைப்பரும் பெருமைத்
தொல்காப் பியமுந் தொல்காப் பியங்களுந்
தோமறக் கற்றிலேன் றொன்மைநூற் றொகுதி
கண்டிலே மேற்புலக் கலைஞர் தரூஉம்
பூதபௌ திகநூல் புதுரசா யனநூ
லுடற்கூற் றெண்ணூ லோதரும் வானநூல்
சராசரப் பகுதிநூல் சரிதநூன் முதல
வறிகின் றிலேமா லறிகின் றிலேமா
னொருநற் கின்று நேரிதாக் கற்றதொன்
றின்றே யென்றென் றெண்ணி யினைந்திட்
டடங்கி யென்று மாங்கமர் வாரே. (௰க)

## [பயனில சொல்லாமை.]

கண்ணோ ரிரண்டுங் காதோ ரிரண்டும்
வைத்துநா வொன்று வகுத்தன னான்முக
னென்கொ லீதென் றிரும்பூ துறன்மின்
காண்டற் குரியன கங்கிலா தோங்கின
கேட்டற் குரியன கெழுமி நின்றன
பேசற் குரியவோ பெரும்பய னுளசில
வாதலி னவ்வகை யாக்கின
னென்ப சான்றோ ரீததன் குறிப்பே, (௰௨)

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தனிப்பாடற்றொகை.

தில்லைவளாகமான்மியவசன

துதிவிருத்தம்.

## [ விநாயகர். ]

சீரேறு பிரணவகுஞ் சாமாகிச
சிவக்கொழுந்து *செல்வான் கண்டு
நாரேறு சிவையாங்கப் பிடியாகி
மருவவரு நால்வா யனபா
சூரேறு மஞர்தொலைத்துச சுதையேறு
மருப்பேந்தித் தொல்லை ஞால
மேரேறு மாதில்லை வளாகமே
றேரம்ப னிணைத்தாள்போற்றி. (அ)

## [சிதம்பரேசுரர்.]

பொன்மானுஞ் சொன்மானுங் கண்மைபெற
வலைநஞ்சம் புசித்தொண் கண்டத்
தன்மானும் படிவைத்திட் டுமைகண்ணே
யொண்மானு மங்கை யேந்திச்

* செல்வான்—செல்லுதல்.

சென்மானுங குழன்மலைமா னுலகுயிர்க
ளுய்ந்திடுமா சேவை கொள்ளத்
தன்மானு நடநவிலு மாதிசிதம்
பரப்பெருமான் றாள்கள் போற்றி. (உ)

## [இராமர்.]

அத்திரமொன் றெய்துதச முகனார்த
முயிர்கவர்த லாதி யானே
ரத்திபல பலதளிகள் சென்றுகழித்
தெஞ்ஞான்று மமர்வான் வேண்டிப்
பத்திரச மலிந்தொழுக வாதிசிதம்
பரநாதற் பரவி வைகும்
பத்திரதன் றருமதலை பதுமமலர்
புரையுமடி பணிந்து வாழ்வாம். (௩)

விரோதாபாசாலங்காரமமைத்துப்
பாடுகவெனப்பாடின

## விருத்தம்.

பண்ணானை யண்டமெலாம் பண்ணி னானைப்
பத்தர்கட மனத்தினிக்கும் பாகை மூன்று
கண்ணானை மேதக்கோர் கண்ணி னானைக்
கைலைவா ழரசையுரு வொன்ப தென்னு
மெண்ணானை யீடேற்ற வெண்ணி னானை
யெங்கோனை யீடேற்ற மில்லா தானை
மண்ணானை வனவேடன் மண்ணி னானை
மாசற்ற மணிவிளக்கை வழுத்துவாமே. (௪)

ஒரு சந்நியாசிவேடதாரியை நோக்கிக்கூறிய

## வெண்பா.

செங்கீர் தசையிரண்டுஞ் சேர்ந்தான துன்னுடம்பு
மெந்நாளு மும்முறைநீ யென்னினுண்பா—யிந்நாளி
லெற்றேபெண் ணாசை யிகந்தா யிசைத்திடுதி
வற்றுந் துறவொழுக்கு வாய்ந்து. (௫)

சுலோக மொழிபெயர்ப்பு

## வெண்பா.

கோசலைகை கேசியிவர் கொண்டு சுமித்திரைக்கு
நேசமிகப் பாயசத்தை நீட்டினார்—வாசத்
திருபாகங் கையேற் றிருவரையீன் றன்னார்க்
கருமையுணி யீந்தா ளவள். (௬)

உண்ணுங்கா லுண்க வுதவிபலி காக்கைக்கு
நண்ணுங்கா னண்ணவனை கைக்கொட்டோ—டெண்ணி
யிரவிற்றற் காக்க வெழுந்துவரு கோப
முரணிற் றடிக்கநல முண்டு. (௭)

பாவ மழிக்கும் பகையொழிக்கு மர்ச்சுனர்க்கா
வாவமுப ரம்புசிலை யங்கடக்கு—மேவனைய
கண்ணியையன் றெய்தக் காகுத்த னல்வன்னி
நண்ணிவணங் கப்படமொ னன்கு. (௮)

[குந்திசொல்லிய ஆசீர்வாதம்.]

விஞ்சையில ராகமா வீரமில ராகதிரு
விஞ்சரிவை போகம் விரும்புற்றே—பஞ்சணையி
னெஞ்ஞான்றும் வாழ்கிற்கு மின்புதல்வர்ப் பெற்றிடுகை
மைஞ்ஞான்ற கண்ணிணையாய் மற்று. (௯)

கவிதை வனிதை கலப்பிற்று மேயின்
பவரை வலிதி னணையிற்—சுவையுறவே
யின்பஞ் செயுநல் வியல்பின்றி யேயெவர்க்குந்
துன்பமுள தாமென்றே சொல். (௰)

ஒண்மதியங் கண்டா லுவராழி கொந்தளித்த
லெண்மதிதன் பாற்றோன் றியைபினாற்—கண்மலர்வ
வாம்பன் மதியினரை யான்றோர்தாங் கண்டக்கா
லேம்ப வியல்பாக லின். (௰௧)

பூகோளத்தைப்பற்றிய

## விருத்தம்.

நீளமா விரியு மேனு நிலவரைப் புள்ள மாந்தர்
காளமா வெண்ணி றத்தர் கருத்தர சறிவா சாரஞ்
சோளமாங் கூலமாதி தொழில்வகை யுணர்த்து நற்பூ
கோளமா மதனி னுண்டோ கோதறு நூலொன் றம்மா (௰௨)

---

தனது புதல்வர்க்கு வித்தையும் வீரமும் நிரம்பவிருந்தும் அவர்கள் இன்பநுகராது காடுறைந்துங் கரந்துறைந்துங் காலங்கழித்தமையிற் குந்தி இங்ஙனம் ஆசீர்வதித்தாளென்க.

[சென்னைவருணனை.]

## விருத்தம்.

வானுடும் வந்துபுகக் காதலிக்குஞ்
செவ்வியதாய் மலர்க்க ரத்து
மானுடுஞ் சம்புமகிழ் திருப்பதிக
ளகந்தழீஇ மாக்கண் மொய்த்துத்
தேனுடுங் குழனல்லார் பொற்பாலுங்
கற்பாலுந் திகழ்ந்து நின்றார்
கோனுடுங் கலவியினிற் புலவியினிற்
கலனெறியுங் குவளைச் சென்னை. (௰௩)

பாடாண்பாட்டிற் சொல்லிய
சென்னைவருணனை.

## நிலமண்டிலவாசிரியப்பா.

உலகம் யாவையு மொருங்குடன் பூத்த
வுமைமகி ழொருத்தற் குவப்பின்றித் தாழ்ந்து
தாழையென் றாகியுந் தாரணி வாழ்வுறூஉ
மாதர் மனக்கிசை மாண்புமே வலினவர்
கையிற் கொள்ளாக் காரி னிருண்ட
வைம்பான் முடிப்புழி யதனொடு தைக்குங்
கைதை வேலிசூழ் கவின்சினை பொதுளிய
புன்னை ஞாழ லடம்பின் பொதும்பரின்
மீனேற் றுக்கொடி விருப்பொடு நாட்டி
வருணற் பரவ வலைவளன் மிகுத்து
மீன்விலை பகர்ந்தும் வெறுப்ப வயின்று
மெஞ்சிக் கிடப்பன வெண்ணில வாகப்

பாழா காமற் பதனுற வவற்றைப்
பண்ணுமுப் பாங்குப் படுவ தாகப்
பரத்திய ருணக்குறூஉம் பட்டினஞ் செட்டின
மசலத் தெருவினு மகலத் தெருவினுங்
கடற்கரைத் தெருவின் கண்ணு மேன்மே
லோங்கித் தழைப்ப வொருவயின் வழக்கினைத்
தீர்க்கு மவைக்கட் டிகழ்ந்துமன் னேச்சு
கோலின் செம்மை குறைவொரீஇப் பொலியப்
பிறர்மனை யவரைப் பெட்பிற் புல்லுதல்
களவிற் பிறர்பொருள் கவர்தல் பிறர்கைந்
நாட்டிட னம்பு நலமிக் கோரை
வஞ்சித் திடுதன் மாறுகொண் டடித்தன்
முதலவாந் தீத்தொழின் முனைந்து புரியு
மிண்டர்ப் புடைத்து மிகைபின் செயாவகை
நல்வழிப் படுத்தூஉ நவையொன் றில்லாத்
தொகுதியோர் வளர்க்குந் தொல்லற மொருவயிற்
றலைநிவந்தெழத் தாக்கணங் கனைமர்ந்
துறையு மில்லங்க ளொவ்வொன் றினுக்கு
நீர்கால் வழியா நீங்கா துவரப்
புரிந்து மதியெனப் பொங்கு மொளிதரும்
விளக்க மெடுத்து வீதி தொறுமலி
குப்பை யகற்றிக் கூர்ந்ததீ நாற்றம்
போக்கி வாழ்குநர் புகுநோ யின்றி
யெழில்கொள வியற்று மிக்குழு வினர்தந்
தொழில்க ளொருவயிற் றுலங்கா நிற்பக்
காம ரிஞ்சிசூழ் கல்லினும் வலிதாண்

பாலுறூஉம் வீரர் பல்லா யிரவ
ராணையின் வழியே யமர்ந்தினி திருப்பவு
மங்கக் காவல ராண்டகை யோர்பல
ரொருசா ரருகி னூரனுடன் வைகவும்
வெள்ளி விலங்கலின் மிளிர்ந்தழ கெறிக்கு
மாளிகை யதனின் மன்னிக் கஞ்சமுன்
னிருபா னிரண்டா மேமஞ் சான்ற
தேஎத்தின் பகுதி திருமிகப் புரிமா
ரொருதனிக் குடைக்கீ ழோதநீர் வையந்
தண்ணளி கூர்ந்து தாங்கித் திருமா
லென்ன விளங்கி யெல்லொடல் லென்றாழ்
தன்னிலப் பரப்பிற் றன்கர வாதொளி
பரப்பக் கைபுனை பன்மணி குயின்ற
வரியணை மேவு மானே றடையலர்
வெருக்கொள வந்த மிடலார் கோளரி
மேற்புலத் தொளிரு மேதகு ஞாயிறு
மன்பெயர் நிறுத்துபு மாட்சி துன்னத்
தானுள் பெருந்தகை தங்குமா நகரம்
கலைபயி லும்பல கல்லூ ரிகளும்
பலகலை தேர்பவர் பான்மை யுற்றறி
குழாமுங் குலவுமூர் குன்றமுந் தொளைபடப்
புக்கூ ஒருவிப் புகையினு லியந்திரத்
தமைப்பாற் பற்பக லரிதிற் செலற்பாற்
றோரிடம் வைக லொன்றி னடைதர
வேகமா யோடு மேம்படு சகடத்
தொடர்நா டோறுந் தொலைவிலா தொருபா

லடுத்தடுத் தோடவு மாயிரங் காவதத்
தப்பா ணிகழ்வதொன் றன்றே யீங்குளா
ரறியவு மீண்டை யாவதொன் றுங்குளா
ரறியவு மியன்றமின் சார மமைவுறாஉந்
தந்திதா மெங்கணுஞ் சமைவுற் றிருப்பவு
நீரா வியினு ணீடுமின் சாரந்
தன்னு லோடுஞ் சகடம் பலப்பல
தெருக்க டோறுஞ் செவ்விதி னோடும்
பழம்பதி பரமன் பத்தர்கட் கருள
மகிழ்ந்தரு ளொற்றியூர் மயிலை முதற்பல
தலங்க டிருமா றண்ணளி சுரப்ப
வைகும் பிருந்தா வனமுதற் பதிகண்
மன்னிய பெருஞ்சீர் வளமுறாஉந் தனனிக
ரிலதாஞ் சென்னை * * * * (௰௪)

பாடாண்பாட்டிற் சொல்லிய
கொடைவருணனை.

* * * கன்னற் குப்பின்
கொடையிலை யென்பார் கொள்கை நேரிதன்
றிரவலர் குறிப்பறிந் திலமெனப் பின்ன
ரவருரை யாவா றகமலர்ந் தின்சொல்
பகர்ந்து கொடுத்தி பரிந்துநின் வலக்கை
தருவதொன் றிடக்கை தானறி யாதே
யிடக்கையி னுள்ளதை யேற்றமார் வலக்கையின்
மாற்றியீ வதற்குண் மனமது மாறுமோ
வென்றிடக் கையினு மீந்தரு ளுவையே
* * * * (௰௫)

சிலர்விருப்பின்படி
மாரியம்மைமேற்சொல்லிய

## விருத்தம்.

பச்சிலை பறித்துப் பரிவினிற் சாத்திப்
பழிச்சுநர் பழவினை பறிக்கப்
பாங்குள துவசங் கட்டுமே ஞார்ந்த
பரனைமுன் னுறுகுணத் தளித்து
நச்சிலை குனித்துக் கொழுமுகத் துதித்த
நங்கையை மணந்தசெம் மலைத்த
னந்துத விலர்தாந் தாமத குணத்தி
னல்கினன் முகனோரா சதத்தீந்
தெச்சமி றொழிலோர் மூன்றினைப் புரியு
மெழிலுறு சத்திதன் கூற்றி
னேய்ந்துநின் றிடுகந் தெய்வநீ யென்றே
யேத்துநற் றொண்டருக் கருள
விச்சையா லொழுக்காற் கல்வியாற் றனத்தான்
மிக்கவர் மேவுசென் னைக்கு
வீறளித் திடுசிந் தாத்திரி யமரும்
வேம்படித் தாயடி போற்றி. (மசு)

## ஷ விருத்தம்.

சிவம்பெருகு திருச்சென்னை யம்பதிக்க
ணிலவுசிந்தாத் திரிப்பேட் டைக்குட்
டவம்பெருகு மவருறையு முயாருணை
சலன்வீதி தன்னின் மேவு

நவம்பெருகு சொர்ணப்பேர் மாரியம்மை
நம்மரசி நாளுந் தாழ்வோ
ரவம்பெருகு மூனடைந்த விப்பிறவித்
துன்பதனை யழிப்பண் மாதோ. (௪௭)

கலைமகளைப்பற்றிய

## வெண்பா.

வெண்டா மரையிருக்கும் வெள்ளோதி மப்பெடையே
கண்டா மரையிருக்குங் கானமயி—லுண்டான
வெண்ணெண் கலைபேசு மேருலவு பூவையே
யெண்ணெண் கடையேனை யீண்டு. (௪௮)

திருமகளைப்பற்றிய

## வெண்பா.

நெடியோய் படியளந்த நீஇயோ யென்னை
படியாளோ வென்னேதம் பார்த்துக்—கொடியாங்த்
தீங்குன் கொடியனையுஞ் சேயெனவே பேசினளா
யாங்குன் னருள்சேர்த்த வாய். (௪௯)

## முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்

# அநுபந்தம்.

| பக்கம். | பாட்டு. | அடி. | குறிப்பு. |
|---|---|---|---|
| ௩௩ | ௰௯ | ௨ | தனம்-ஸ்தனம், பொருள். |
| ,, | ,, | ௬ | ஓங்குக-ஓம் குக, செழிக்க. |
| ௩௬ | ௯ | ௩ | அஙகண்-'அங்கு அண்' எனப்பிரிக்க. |
| ௩௭ | ௫ | ௩ | ஒருவுளவு- (அத்திருக்கு) ஒருவுதற்கேற்ற உளவு. |
| ௪௧ | ௮ | ௫ | உருமுதலே-'உரும் உது அலே ஒலி' எனப் பிரித்துரைகோடலுமாம். |
| ,, | ௰ | ௧ | கோல்-பாணம். |
| ,, | ,, | ௨ | கோலம்-அழகு. |
| ,, | ,, | ௩ | கோல்-அஞ்சனக்கோல்; அம்-அழகு. |
| ,, | ,, | ௪ | கோல்-ஊன்றுகோல். அஞ்சாய்-'அம் சாய்' என்றுதல் 'அஞ்சு ஆய்' என்றுதல் பிரிக்க. அம்-நீர். அஞ்சு-அம்[illegible], காந்தி. ('அஞ்சுவணத்தின்முத் தொளிராரத்தணிகொண்டாள்' என்றார் கம்பரும். |
| ௪௬ | ௮ | ௨-௩ | அஞ்சுகந்தாசமுத்தியென்பார்-பௌத்தர். |